500 Business Cards - Only $25
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்...
1345 Morningside ave #8, Scarborough Tel:416-284-9545

இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com

Dental Clinic
Dr. Iru VIJAYANATHAN
BDS, MFDS, FAGD,
General Dental Practitioner
3150 Eglinton Ave East Scarborough (Markham & Eglinton) 416.264.3232
3351 Markham Road # 129 Scarborough (Markham & Steeles) 416.609.2022

26 ஐப்பசி 2012, 10,000 பிரதிகள் இதழ் 8

# அதிகரிக்கும் போராட்டங்கள்!

**அண்மையில் நடைபெற்ற பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம், நாட்டின் பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளை ஸ்தம்பிதம் அடையச் செய்திருந்ததுடன் அப்போராட்டம் மக்கள் போராட்டமாக வளர்ச்சி பெறும் என்ற எதிர்பார்ப்பினையும் ஏற்படுத்தியிருந்தது.**

ஆயினும் சரியான தீர்வுகள் கிடைக்காத நிலையில் அப்போராட்டம் கைவிடப்பட்டது. எனினும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீண்டும் தொழிற்சங்கப் போரட்டங்களை நடாத்தப் போவதாகத் தெரிவித்து வருகின்றார்கள்.

இந் நிலையில் அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தியிருக்கிறார்கள். இன்று புதன் கிழமை ஆசிரியர், அதிபர் சங்கங்கள் ஒன்றிணைந்து சம்பள உயர்வுக் கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வார்ப்பாட்டப் பேரணியினை நடாத்தியிருக்கிறார்கள். அதிபர் மற்றும் ஆசிரியர்களின் 15 தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்திய இப்பேரணி காலை 10 மணியளவில் கொழும்பு பொரளையில் ஆரம்பமாகி இசுருபாயாவில் அமைந்துள்ள கல்வி அமைச்சு வரை நடைபெற்றது. இப்போரட்டத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டுமிருந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர், “2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசிரியர்களுக்கான சம்பளம் நாட்டின் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் வகையில் அதிகரிக்கப்படவில்லை. ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படாமலுள்ளன. பிரச்சினைகள் குறித்து கல்வி அமைச்சருக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்த போதும் கல்வி அமைச்சு பதில் எதனையும் தரவில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காத நிலையில் ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்துவதற்கு தீர்மானித்தோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், “இப்பேரணியை அடுத்து கல்வி அமைச்சு எமது பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும். இல்லையேல் நாடு தழுவிய வகையில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள ஆசிரியர், அதிபர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன” எனத் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் இன்று பல்கலைக்கழகங்களுக்கு முன்பாக, அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச குற்றவியல் திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராகப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அனைத்துப் பலகலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இவ்வார்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.இதேவேளை, சம்பள அதிகரிப்பை வலி யுறுத்தி அரச வைத்தியர்கள்

தொடர்ச்சி 2ம் பக்கம்

பூபாளத்தில் விளம்பரம் செய்ய
Tel: 416.284.4004
e-mail: boobalam@ymail.com

## லிங்கன் மக்கோலி அலெக்ஸாண்டர்



கனடாவின் முதற் கறுப்பினப் பாராளுமன்ற உறுப்பினர் லிங்கன் மக்கோலி அலெக்ஸாண்டர் (Lincoln MacCauley Alexander) ஒக்டோபர் 19ஆம் திகதி தனது தொண்ணூறாவது வயதில் காலமானார்.

*1922ல் பிறந்த அலெக்ஸாண்டர் இரண்டாவது உலகப்போர் காலப்பகுதியில் (1942-1945) கனடிய வான்படையில் இணை ந்து சேவையாற்றினார். இவர் தனது கலைத்துறைசார் இளமாணிப் பட்டத்தை 1949ல் மக்மாஸ்டர் பல்கலைக் கழக்த்தில் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ரொறொன்ரோ ஒஸ்ஹூட் ஹோலில் தனது சட்டப்படிப்பை மேற்கொண்டு 1953ல் பட்டத்தை பெற்றுக்கொண்டார்.*

*1968ல் நடைபெற்ற கனடிய பாரளுமன்றத் தேர்தலில் முற்போக்குக் கென்சேர்வேடிவ் கட்சியின் சார்பில் மேற்கு ஹமில்டன் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். 1979-1980 காலப்பகுதியில் ஜோ கிளார்க் தலைமையிலான அரசில் தொழிற்றுரை அமைச்சராகப் பணியாற்றினார். தனது பொதுச்சேவையாலும் மிதவாதப் போக்கினாலும் மதிக்கப்பட்ட அலெக்ஸாண்டர் 1985ல் பிரதமர் முல்றோனியால் ஒன்ராறியோ மாநிலத்தின் ஆளுனராக நியமிக்கப்பட்டார். 1992ஆம் ஆண்டுவரை ஆளுனாராக சேவைபுரிந்தார்.*

**-தர்சன்**

படம்: நன்றி yahoo news

JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5

Nickes Fancy
நிகேஷ் பான்ஷி
Gents & Ladies Readymade Garments, Sarees, Salwar Kameez, Children Wears, Books & Gift Items
462 Jean Talon West,
Montreal, QC. H31 1R3
514.495.3765, 514-270.81.81



THE COURIER SOURCE
International
- Worldwide Express
- Worldwide Economy
- Air Fright/ Sea Freight
- Export & Import
Local & Nationwide
- Overnight Services
- Same Day Services
- Direct Drive
905.761.7979
Torontoவிலிருந்து உலகின் எப்பாகத்திற்கும்.. இலங்கை, இந்தியாவிலிருந்து Torontoவிற்கும்.
8600 Keele St, Unit #10, Concord, ON, L4K 4H8
Sales@thecouriersource.com, www.thecouriersource.com



"Make Your Dream Home Come True"
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating,
Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation,
Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth
Repair Technicican
647.768.4143

BALACHANDRAN MUTHAIAH
Professional Corporation
Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public
Real Estate Law, (Residential/Commercial), Business Law, Family Law, Immigration Law, Estates Law, Last Will, Affidavits, Probate, Translations, etc.
2401 Eglinton Ave. E. Suite 300, Toronto, ON M1K 2M5
Ph: 416.755.5544, Fax: 416.755.5594
e-mail: balalawoffice@gmail.com

## அதிகரிக்கும் போராட்டங்கள்...

சங்கத்தினர் நாடு தழுவிய அளவில் பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் தொழிற் சங்கப் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கடந்த திங்கட் கிழமை சபை புறக்கணிப்புப் போராட்டத்தினை தமிழத் தேசியக் கூட்டமைப்பு சார்பான பிரதேச சபை உறுப்பினர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு பிரதேச சபைகளின் முன்பாகவும் இப்போராட்டம் நடைபெற்றது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட அப்பிரதேச சபையின் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 550 பரப்புக் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளமைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடரப் போவதாகத் தெரிவித்திருக்கிறார். அதேசமயம் நல்லூர்ப் பிரதேச சபைக்குரிய காணி யொன்றை இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பது தொடர்பிலும் சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிலையிலேயே இனந் தெரியாதோரினால் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் தாக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர், உள்ளூராட்சி சட்ட விதிமுறைகளுக்கு முரணாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பிரதேச சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோதரலிங்கம், தெற்கிலிருந்து கொண்டு வரப்பட்டு முல்லைத்தீவில் விடப்பட்டுள்ள வளர்ப்பு யானைகள் மக்களின் வீடுகளை தேசப்படுத்தி மக்களை அச்சப்படுத்தி வருவதனை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கா விட்டால் வீதியல் இறங்கிப் போராட வேண்டிய நிலை உருவாகும் எனப் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

தொழிற்சங்கப் போராட்டங்கள் அரசியல் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், மத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மேசையில் ஏறி ஆர்ப்பாட்டம் ஒன்றினைச் செய்திருக்கிறார். கடந்த செவ்வாய்க் கிழமை மத்திய மாகாண சபைக் கூட்டம் நடைபெற்ற வேளையில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரான திலக் ராஜபக்ஷ லஞ்சம் வாங்கிய குற்றச் சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டு விடுதலையான மத்திய மாகாண தனியார் போக்கு வரத்து அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரை மீண்டும் அதே பதவியில் நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ்வாறு மேசையில் ஏறி ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டிருக்கிறார்.

## காய்ச்சல் தடுப்பூசியை எடுப்பதன் மூலம் சுகமாக இருக்க வழி செய்யுங்கள்

"காய்ச்சல் தடுப்பூசி எடுப்பதால் உங்களை மட்டுமன்றி உங்களைச் சூழ உள்ளவர்களையும் உங்களின் அன்பானவர்களையும் கூட நீங்கள் பாதுகாக்கிறீர்கள்" என்கிறார் ஒன்ராறியோ சுகாதார அமைச்சர் Deb Matthews.

காய்ச்சல் தடுப்பூசி உங்களுக்கு வருத்தத்தைத்தரமாட்டாது. ஆறுமாதக் குழந்தைகள் முதல் கர்ப்பவதிகள் உட்பட ஆரோக்கியமான எவருமே இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாம். எனவே இந்தப் பனிக்காலத்தில் சுகமாக இருக்க, இலவசத் தடுப்பூசியை தவறவிடாமல் இன்றே எடுங்கள்.

இதை உங்கள் வேலைத் தலங்களிலோ, குடும்ப வைத்தியரிடமோ பெற்றுக் கொள்ளலாம்.

## இனிப்பு உங்களை முட்டாள் ஆக்குகின்றது!

இனிப்புச் சத்து உடல் பருமனுக்கும் சலரோகத்துக்கும் காரணமாகின்றது என்பது ஏற்கனவே ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.
செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட புள்ளி விபரவியலின் படி கனடாவில் 5 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப் பட்டவர்களில் 31.5 வீதமானோர் உடல் பருமனுள்ளவர்களாகவே இருக்கின்றனர்
இனிப்பு உங்களைக் கொழுக்கப் பண்ணுவது மட்டுமன்றி உங்களை முட்டாள்களாகவும் ஆக்குகின்றது என்கிறது தற்போதைய கலிபோர்னியா ஆய்வு ஒன்று. கற்றல், ஞாபகசக்தி போன்றமூளைச் செயற்பாடுகள் யாவும் எப்படிச் செய்தி கடத்தப்படுகின்றது என்பதிலேயே தங்கியுள்ளன, அதை இனிப்பு இடையூறு செய்கின்றது என்று எச்சரிக்கை செய்யும் ஆய்வாளர் Gomez-Pinilla.
ஒமேகா-3 கொழுப்பமிலங்கள் உள்ள உணவுகளைச் சாப்பிடுவது இனிப்பினால் வரும் அபாயத்தை குறைக்கும் என்றும் ஆலோசனை சொல்கிறார்.

# கனடியச் செய்திகள்

## மதுவிற்கு அடிமையான பா.உ வேலையிலிருந்து விடுப்பு

கடந்த வெள்ளிக்கிழமை, மொன்றியலிருந்து Val D'or க்குப் புறப்பட்ட எயர் கனடாவின் Jazz விமானத்திலிருந்து, அதிகமாகக் குடித்திருந்த காரணத்துக்காக MP Romeo Saganash, வெளியேற்றப் பட்டிருக்கிறார். இதனால், விமானம் அன்று அரைமணி நேரம் தாமதமாகியது.
"இன்றைக்கு வெள்ளிக்கிழமை, நீண்ட வேலைவாரத்தின் பின் நாங்கள் எல்லோரும் தான் மனத்தகைப்புக்கு உள்ளாகின்றோம். அதற்காக மன்னிப்புக் கோருகின்றேன்" என அவர் முதலில் CBC க்குத் தெரிவித்திருந்தாலும், பின்னர் "களைப்போ அல்லது மனத்தகைப்போ நான் செய்ததை நியாயப்படுத்த மாட்டாது. இந்த பிரச்சனையிலிருந்து நான் மேவ ஏனைய கனேடியர்களைப் போல எனக்கும் உதவி வேண்டும் வேண்டும்." எனத் தன் பிரச்சனை ஒத்துக் கொண்டு தன் வேலையிலிருந்து விடுப்பு எடுக்க முடிவெடுத்துள்ளார். "என் பிரச்சனைக்கு காரணம் தேடுவதற்காகச் சொல்லவில்லை, எனது நண்பரும், ஆலோசகருமான ஜாக் லேட்டனின் மரணமும் என்னை மிகவும் பாதித்துள்ளது" என்றும் மேலும் தெரிவித்திருக்கிறார் இவர்.

## லிபரல் கட்சியின் புதிய தலைமை

முதல்வர் மக்கின்ரியின் ராஜினாமாவைத் தொடர்ந்து வந்த தலைமைப பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஒன்ராறியோ லிபரல் கட்சியின் தலைமை தேடும் மாநாடு வருகின்ற ஜனவரி மாதம் 25 ம் திகதி நிகழ இருக்கின்றது. தலைமைக்குப் போட்டி போட விரும்புபவர் லிபரல் கட்சியின் 250 அங்கத்தவர்களிடம் கையொப்பம் வாங்குவதுடன் 50,000 டொலர் பிரவேசக் கட்டணமும் கட்டவேண்டும்.
வீட்மைப்பு அமைச்சர் Kathleen Wynne, சுகாதார அமைச்சர் Deb Mathews ஆகியோர் இப் போட்டியில் பங்குகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் முன்னாள் அமைச்சர் George Smitherman அவர்களும் இதில் போட்டியிடலாம் எனவும் நம்பப்படுகின்றது.

## 15 வயதில் 14 பாலியல் தாக்குதல்கள்

ரொறோன்ரோவின் Bloor & Christie பகுதியில் தொடராகப் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பெண்களில் பாலியல் தாக்குதல் புரிந்ததாக பொலிசாரால் ஒரு பதின்மவயது ஆண் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இரவில் நடந்து போகும் பெண்களின் பின் சென்று தாக்கிய இந்த நபர், Bloor Street West & Roxton Road பகுதியில் சனிக்கிழமை இரவு 11 மணியளவில் இன்னொரு பாலியல் தாக்குதலில் ஈடுபட்டிருந்த போது பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மேல் 14 பாலியல் தாக்குதல் குற்றங்களுக்கும் 2 குற்றவியல் தொந்தரவுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

## ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 99 சதமாகலாம்

கோடை கால சுறுசுறுப்பான காரோட்டக்காலத்தின் முடிவு பெற்றோலின் விலையில் சாதகமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்கிறார், Gasbuddy.com Toews. பொதுவாக குளிர்காலக் காரோட்டம் குறைவாதலால் குறைந்து செல்லும் பெற்றோலின் விலை விரைவில் 99 சதத்தை எட்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பின்னர் புதுவருடத்துடன் மீண்டும் விலை ஏறி அடுத்த கோடைகாலத்துக்கு மீண்டும் அதன் உச்ச விலையை அடையலாம்.

## புகைப்பிரியர்களின் கவனத்துக்கு

புகைபிடித்தலுக்காக உணவகங்களின் திண்ணைப்பகுதியை நோக்கிச் செல்கிறீர்களா? அங்கு மட்டுமன்றி, அனைத்துப் பொதுவிடங்களிலும் புகைபிடித்தலைத் தடைசெய்யும் சட்டம் விரைவில் அமுலுக்கு வருகின்றது. உணவகங்களில் வேலை செய்பவர்கள் புகைக்கு வெளிக் காட்டப்படுவதால் அவர்களின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுவதால் இந்தச் சட்டம் மிகவும் தேவையானதொன்றே என்கிறார், ஆரோக்கியத்துக்கான மருத்துவ அதிகாரி Dr. David McKeown

## ஞாயிறு திறக்கும் வங்கிகள்

இணையத்திலும் வங்கி இயந்திரங்களிலும் தமக்கு வேண்டிய வங்கி சம்பந்தமான வேலைகளைச் செய்வது இப்போது அதிகமாக நடக்கின்றது என்றாலும் வங்கிகளைத் திறந்திருக்க வேண்டிய நேரத்தின் தேவை குறையவில்லை. முதலிடல் சம்பந்தமான ஆலோசனைகளுக்கும், முகம் பார்த்து சேவை பெறவேண்டிய தேவைக்கும் இன்னும் பலர் வங்கிகளையே நாடுகின்றனர். எல்லோருடைய சுறுசுறுப்பான வாழ்க்கைக்கும் ஈடு கொடுக்கும் முகமாக வங்கிகளை நீண்ட நேரம் திறந்திருக்க வேண்டியிருப்பதுடன் வார இறுதி நாட்களிலும் திறக்கவேண்டியுள்ளது என்கிறார் CIBC வங்கியின் உபதலைவர் Larry Tomei.


BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# அணுகுமுறையை மாற்றுவோம்

1915 இல் துருக்கியின் ஒட்டோமான் சாம்ராஜ்யம் தனது ஆட்சிப் பகுதிக்குள் இருந்த ஆர்மீனியர்களை இனப்படுகொலை செய்தது. வயது வந்த ஆண்களைக் கொலை செய்ததுடன், பெண்களையும் குழந்தைகளையும் தற்போதைய சிரியாவின் வனாந்தரங்களுக்கு துரத்தியது. ஹிட்லரின் ஆட்சியில் ஆறு மில்லியன் யூதர்கள் படுகொலை செய்யப்பட்ட இன அழிப்புக்கு அடுத்ததாக ஒன்றரை மில்லியன் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்ட இந்தப் படுகொலையை நூறு ஆண்டுகள் கழித்தும் உலகின் பல்வேறு நாடுகள், சமீபத்தில் பிரான்ஸ், கனடா என, இன அழிப்பாக ஏற்றுக் கொண்டுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தக் கொலைகளை இன அழிப்பு என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்காவிட்டாலும் இந்தக் கொலைகள் நடந்த உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதுவரையும் துருக்கி இந்தப் படுகொலைகளுக்கான பொறுப்பை மறுத்தே வந்துள்ளது.

1985ல் கனடாவின் தலைநகரில் உள்ள துருக்கிய தூதுவரகத்தின் மீது ஆர்மீனிய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்பு அலுவலர் கொல்லப்பட்டதுடன், தப்பியோட முயன்ற துருக்கிய தூதுவரும் மாடியிலிருந்து விழுந்து காயமடைந்தார். தீவிரவாதிகள் தூதுவரின் மனைவியையும் பிள்ளையையும் மற்றும் அலுவலர்களையும் பணயக் கைதிகளாக்கி, பின்னர் பொலிசாரிடம் சரணடைந்தனர்.

கனடா அங்கம் வகிக்கும் நேட்டோ நாடுகளின் அமைப்பில் துருக்கி அங்கத்துவம் பெற்றுள்ளதுடன், மேற்குலகின் நட்பு நாடாகவும் விளங்குகிறது. ஆனால் துருக்கியின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பல மேற்குலக நாடுகள் ஆர்மீனிய இன அழிப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளன. அதிலும் கனடாவில் வன்செயல் நடவடிக்கையை ஆர்மீனிய தீவிரவாதிகள் மேற்கொண்ட போதிலும், கனடாவில் அரசு உத்தியோகபூர்வமாக இதை ஏற்றுக் கொண்ட நிகழ்வில் சகல கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

நூறு வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வுக்கு இன்றும் இந்த மேற்குலகம் அக்கறை காட்டி வரும் போது, இதே மேற்குலகில் லட்சக்கணக்கான தமிழர்களைக் கூட்டி கொடி பிடித்து, பெருந்தெருக்களை ஸ்தம்பிக்கச் செய்தும் யாருமே ஏன் என்று கேட்காமல் போனதன் காரணம் என்ன? கண் முன்னால் அழிந்த எம் இனத்தை இந்த உலகம் கண்ட பின்னாலும், இத்தனை இன அழிப்புக் கூச்சல் போட்டும் எந்த அரசியல்வாதியும் எங்களுடைய எந்தக் கோரிக்கைக்கும் செவி சாய்க்காமல் போன காரணம்தான் என்ன?

> படை திரட்டிப் புஜபலம் காட்டினால் போதும், எதிரியை மட்டுமன்றி, எவரையும் மிரட்டலாம் என்பது தான் எங்கள் கொள்கையின் அடிப்படையே

ஏன் இந்தக் கேள்வியை நாங்கள் இன்னமும் எங்களுக்குள் எழுப்பவில்லை?

இதுவரை காலமும் புலம் பெயர்ந்த நாடுகளில் எங்கள் போராட்டம் எந்த வகையானதாக இருக்கிறது?

நாங்கள் இன்னமும் எங்கள் திராவிடப் பாரம்பரியத்துக்குள் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?

தங்களுக்குள் பிளந்து போன திராவிடக் கட்சிகள் இன்று வரைக்கும் போடுகின்ற கோஷம் இது. கிராமங்களில் இருந்து வண்டிகளில் கொண்டு வந்து இறக்கி, சென்னையைக் கலங்க வைத்தால் அது மாபெரும் வெற்றி என்ற எண்ணம் எல்லாத் திராவிடக் கட்சிகளுக்கும் உண்டு.

படை திரட்டிப் புஜபலம் காட்டினால் போதும், எதிரியை மட்டுமன்றி, எவரையும் மிரட்டலாம் என்பது தான் எங்கள் கொள்கையின் அடிப்படையே.

இது தமிழ் நாட்டிலோ, புலிகளின் ஆட்சியில் இருந்த யாழ்ப்பாணத்திலோ நடத்தலாம். இது எங்களை நாங்களே குஷிப்படுத்த உதவும். பயன் தருமா?

அல்லது போனால், கறுப்புக் கொடி!

வருகின்ற பிரமுகர்களுக்கு கறுப்புக் கொடி காட்டி அவமதிப்பதும், கறுப்புக் கொடி ஏற்றி துக்கம் அனுட்டிப்பதும் எங்கள் நாட்டுப் பாரம்பரியம்.

மத்திய தரைக் கடல் நாடுகளில் விதவைகள் உடுத்தும் கறுப்பு உடை தவிர, கறுப்புக்கும் துக்கத்துக்குமோ, அல்லது அவமதிப்புக்குமோ சம்பந்தம் இல்லை. கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்குமே தவிர, கறுப்புக்கொடி பறக்காது.

மிஞ்சிப் போனால், சாகும் வரையும் உண்ணாவிரதம் இருக்கலாம்.

எங்களுக்குத் தெரிந்தவரை மேற்குலகில் அவ்வாறு இறந்தது, பொபி சான்ட்ஸ் எனப்படும் ஐரிஷ் தீவிரவாதி சிறையில் இருந்து இறந்தது தான். கருணைக் கொலை செய்வதற்கே சட்டம் தேவைப்படும் இந்த நாடுகளில் உண்ணாவிரதம் இருந்து தொலைக்காட்சியின் முன்னால் பகிரங்கமாய் தற்கொலை செய்ய அனுமதிக்க மாட்டார்கள். ஏதோ வகையில் அதை தடுத்து நிறுத்துவார்கள்.

இத்தனை வருடங்கள் வெளிநாடுகளுக்கு வந்தும் எங்களால் வெளிநாட்டு அரசியலை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இன்றைக்கும் புஜபலத்தின் மீது தான் எங்களுக்கு நம்பிக்கை. எங்கள் நாடுகளிலேயே இந்த வகையான போராட்டங்கள் இன்றைக்குப் பயன் தருவதில்லை. காந்தி உண்ணாவிரதம் இருந்தார் என்று திலீபனை உண்ணாவிரதம் இருக்க வைத்ததால் சாதித்தது திலீபனின் உயிரிழப்பு மட்டும் தான். இதே திலீபன் உண்ணாவிரதம் இருந்த யாழ்ப்பாணத்தில் தானே பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதம் ஆயுத முனையில் முறியடிக்கப்பட்டிருந்தது.இவை எல்லாம் பயன் தராது என்றுதானே ஆயுதத்தைத் தூக்கினோம்.

இந்த நிலையில் நாங்கள் ஊர் கூடிக் கொடி பிடித்து கோஷம் போடுகிறோமே. இதற்கு எங்காவது பயன் இருந்ததா?

வெளிநாட்டு அரசியல் எங்களுடையது போன்ற உணர்வுபூர்வமான அரசியல் அல்ல. பிரிவினை கோரும் கியூபெக் காரரும் ஜனநாயக வழியைத் தான் தேர்ந்தெடுத்தார்கள். புஜபலம் காட்ட முயற்சிக்கவில்லை. புத்திபலத்தைக் காட்டுகிறார்கள்.

மேற்குலகில் நீங்கள் அணி திரட்டி எந்த ஆர்ப்பாட்டமும் செய்யலாம். ஊடகங்கள் மூலமாக உலகெங்கும் பரவச் செய்யலாம். ஆனால் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அதற்கு சில அடிப்படைகள் உண்டு. உலகமயமாக்கல், ஜி20 நாடுகளின் மாநாடு என பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் பிசுபிசுத்துப் போனது இந்தப் பின்னணியில் தான்.

இங்கே அரசியல்வாதிகளைச் செயற்பட வைக்க வழிமுறைகள் உள்ளன.

முதலாவது உங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, உங்கள் அதிருப்தியை நேரடியாகத் தெரிவிக்க வேண்டும். அதிகமான அளவினர் அவரது அலுவலகத்திற்கு தொலைபேசி அழைப்பு எடுத்து அதிருப்தியைத் தெரிவித்தால், அடுத்த முறை வாக்களிப்பில் தனக்கு ஆபத்து உண்டு என்று அரசியல்வாதிகள் எதையாவது செய்ய முயற்சிப்பார்கள்.

அடுத்தது, கருத்துக் கணிப்புகள்.



ஏடு இட்டோர் இயல்

> வெளிநாட்டு அரசியல் எங்களுடையது போன்ற உணர்வுபூர்வமான அரசியல் அல்ல. பிரிவினை கோரும் கியூபெக் காரரும் ஜனநாயக வழியைத் தான் தேர்ந்தெடுத்தார்கள். புஜபலம் காட்ட முயற்சிக்கவில்லை. புத்திபலத்தைக் காட்டுகிறார்கள்.

இங்கேயுள்ள அரசியல்வாதிகள் தங்கள் நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவு உண்டா என்பதை அறிவதற்கு கருத்துக் கணிப்புகளை எடுக்கிறார்கள். தங்கள் நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்பு அதிகமாக இருப்பதை அறிந்தால் தங்கள் பாதையை மாற்றிக் கொள்கிறார்கள். மக்களின் கருத்துக்களை மாற்றாத ஆர்ப்பாட்டங்கள் பற்றி அரசியல்வாதிகள் கவலைப்படுவதில்லை.

அடுத்தது, மக்கள் ஆதரவையும் மீறி தங்கள் காரியங்களைச் சாதிக்க விரும்புவோர், அரசியல்வாதிகளின் கருத்துக்களில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களைக் கூலிக்கு அமர்த்தி, அவர்கள் மூலமாக அரசியல்வாதிகளை அணுகுகிறார்கள். lobbying எனப்படும் முறை மூலமாக, அரசியல்வாதிகளுக்கு நண்பர்கள், பழைய அரசியல்வாதிகள் போன்றவர்கள் ஊடாக, தங்கள் கருத்துக்களை அரசியல்வாதிகளுக்கு தெரியப்படுத்தி, தங்களுக்கு ஆதரவைத் தேடுகிறார்கள். பணக்காரர்களுக்கு சார்பான சட்டங்கள் இங்கே இயற்றப்படுவதற்கான மூலகாரணம் இது தான்.

மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு என்று சொன்னாலும், பணம் பாதாளம் மட்டுமல்ல, பாராளுமன்றம் வரைக்கும் பாயும்.

நாங்கள் வாழுகின்ற நாடுகளில் உள்ள மக்களின் அனுதாபத்தைப் பெறுவதும், இங்குள்ள நேச சக்திகளை அடையாளம் கண்டு அவர்களோ இணைந்து செயற்படுவதும், ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகள் மட்டுமன்றி, எதிர்க்கட்சிகளையும் கைக்குள் போட்டுக் கொண்டு காரியம் சாதிப்பதுவும் என பல்வேறு வழிவகைகள் மூலம் தான்

பூபாளம் வார இதழ் Palm Springs Newspapers Ltd நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில் வெளியிடப்படுகிறது.
இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.
வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.
Boobalam is published by Palm Springs Newspapers Ltd.
1345, Morningside Ave #8, Scarborough, On, M1B 2T3 Tel: 416 284 4004 e-mail: boobalam@ymail.com Web:www.boobalam.com
Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

எங்களுக்கான ஆதரவைத் திரட்ட வேண்டும்.

எங்கள் விடயத்தில் நடந்தது என்ன?

மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்குப் பதிலாக அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி, அவர்களின் வெறுப்பைச் சம்பாதித்தது தான் நாங்கள் முதலில் செய்த விடயம். ரொறன்ரோவைச் சூழ நின்று மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தலாம். பாதையைத் தடை செய்து சத்தியாக்கிரகமும் செய்யலாம். எதையோ பெரிதாகச் சாதித்த நினைப்பை இவை எங்களுக்குத் தரலாம். ஆனால் இவை இந்த நாட்டில் ஆதரவைத் தேடுவதற்கான வழிவகைகளே அல்ல. ஒருவேளை "விடுப்புப்" பார்க்கும் உணர்வைக் கனடியர்களுக்குத் தரக் கூடும். அவர்களோடு சம்பந்தமில்லாமல் எங்கோ நடக்கும் யுத்தத்திற்கு அவர்களின் ஆதரவைத் திரட்டும் வழி வகையல்ல இவை.

இதே போலத் தான் நேச சக்திகளோடு கை கோர்க்காமல் நாங்கள் தனித்து நின்றதும். இதுவரையும், தமிழர்கள் என்ற முழு இனமாக, மற்ற எந்த சிறுபான்மைக் குழுக்களுடனும் இனங்களுடனும் நாங்கள் கை கோர்த்து நின்றதில்லை. அடையாளம் காட்டியதில்லை. மற்றவர்களின் துயரத்தில் பங்கு கொள்ளாமல், எங்கள் துன்பத்தை எல்லோரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயம் இல்லை.

எங்கள் நன்மைக்காக ஆலோசனை சொன்ன அரசியல்வாதிகளையும் சங்கடங்களுக்குள்ளாக்கி, எங்களுக்கு கிடைக்க இருந்த அற்ப சொற்ப ஆதரவையும் சிதறடித்தது தான் எங்களுடைய பெருமை. கனடாவில் பயங்கரவாத இயக்கமாகத் தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கொடி இருக்கும் இடத்திற்கு வர மாட்டோம் என்ற ஆளும் கட்சியினருக்கும் சரி, அவர்கள் வரும் போதாவது கொடியைக் காட்டாமல் இருங்கள் என்ற ஜாக் லேட்டன் போன்ற அனுதாபிகளுக்கும் சரி, சங்கடம் வர வைத்தது தான் நாங்கள் செய்த வேலை.

புலிகளின் கொடி தமிழ்த் தேசியக் கொடி என்று எங்களை நாங்கள் ஏமாற்றலாம். பயங்கரவாத இயக்கம் என்று தடை செய்த நாட்டில், மற்றவர்களை ஏமாற்ற முடியாது.

சரி, பாராளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் என்று மொட்டையாய் சொல்லி விட்டாலே, ஏதோ தங்கள் வரலாற்றுக் கடமை மாதிரி உள்ளதையும் கெடுக்கும் வேலை தான் எங்கள் சமூகத்தில் கச்சிதமாய் நடக்கிறது.

நாங்கள் எப்போதுமே எங்களைக் குஷிப்படுத்துவதில் தான் அக்கறையாக இருக்கிறோமோ தவிர, உலக யதார்த்தங்களை புரிந்து கொள்வதில்லை.

கனடா இது வரை காலமும் இஸ்ரேலிற்கு நெருங்கிய நண்பனாக இருந்த போதும், பாலஸ்தீனர்களின் உரிமைக்கு குரலுக்கு மதிப்பளித்துத் தான் வந்திருக்கிறது. ஆனால் தற்போதைய அரசு அதிதீவிர இஸ்ரேலிய ஆதரவு நிலைப்பாடு எடுத்ததற்கு காரணம், பலம் வாய்ந்த இஸ்ரேல் சார்பு அமைப்புகள் கனடிய அரசை முறையான வழிகளில் அணுகியது தான்.

அவர்களுக்கும் எங்களைப் போல, ரொறன்ரோவையோ, ஒட்டாவாவையோ ஸ்தம்பிக்கத் தெரியாமல் இல்லை. ஊர் கூட்டி கூத்து நடத்தி சீன் காட்டாமல், திரைமறைவில் விடயங்களைச் சாதித்து விடுகிறார்கள்.

நூறு வருடங்கள் கடந்தாலும், ஆர்மீனியர்கள் தங்களுக்கு என சொந்த நாட்டைக் கொண்டிருந்தாலும், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மறக்கவில்லை. இவர்கள் மேற்குலகில் தமிழர்கள் போல, செய்திகளில் வரும் அளவுக்கு அவர்கள் புகழ் பெற்றவர்கள் அல்ல. மூன்று லட்சம் பேர் உள்ளோம் என்று மிகைப்படுத்தி, கனடிய அரசியலில் எங்களை கிங் மேக்கர்கள் என்பது போல நினைத்துக் கொண்டு நாங்கள் செயற்படுவது போல, அவர்கள் எங்கும் செயற்பட்டதாகச் செய்திகள் இல்லை. அவர்கள் முறையான வழிகளில் சரியான அரசியல்வாதிகளை அணுகுகிறார்கள். தகுந்த முறைகளில் நியாயத்தைப் புரிய வைக்கிறார்கள். ஆர்மீனியர்களின் வாக்குகளுக்காக இந்த அரசுகள் நிலைப்பாடு எடுக்கவில்லை.

கிழக்குத் தீமோர் போராட்டம் தளத்தில் நடந்து கொண்டிருந்த போது, அந்த நாட்டைச் சேர்ந்த ராஜதந்திரி ராமோஸ் ஹோட்டா உலக நாடுகள் எங்கும் தனது நாட்டு விடுதலைக்கான ஆதரவைத் தேடினார். அவர்களுக்கு எங்களைப் போல புஜபலம் இருக்கவில்லை. புத்திபலம் இருந்தது. சாதித்தார்கள்.

இனிமேலாவது, நாங்களும் யார் எவர் அழைக்கிறார்கள் என்றில்லாமல், மந்தைகள் போல பின்னால் போய், கூப்பாடு போடுவதை நிறுத்தி விட்டு, ராஜதந்திர வழிகளில் எங்களுக்கான ஆதரவைத் தேட வேண்டும்.

வெறும் புஜபலம் காட்டி கொடி தூக்குவதை விட்டு, இனியாவது எங்கள் மூளையைப் பாவித்து அனுதாபத்தையும் ஆதரவையும் தேட முயல்வோம்.

# சர்ச்சைக்குள்ளாகும் சமாதானப் பரிசு

2012ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதானப்பரிசு ஐரோப்பிய ஒன்றியத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ளது. இது மிகுந்த சர்ச்சையை உலகெங்கும் ஏற்படுத்தியுள்ளது. ஒன்றியத்திலுள்ள ஸ்பெயினிலும் கிரேக்கத்திலும் 25 வீதமான மக்கள் வேலையின்றி வாடுகிறார்கள். ஐரோப்பிய ஒன்றியம் பாரிய பொருளாதார நெருக்கடிக்குட்பட்டு மக்கள் பெருமளவு துன்பப்பட்டு வரும் இவ்வேளையில் இப்பரிசு தேவையாவெனக் கண்டனம் தெரிவிப்போர் கூறுகின்றனர்.
சர்ச்சை என்பது நோபல் சமாதானப்பரிசிற்கு புதிய விடயமல்ல. காந்தியின் சீடர்களுக்குக் கிடைத்த சமாதானப்பரிசு காந்திக்கு கடைசிவரை கொடுக்கப்படவில்லை. சமாதானப்பரிசுக்கு காந்தி பலமுறை நியமிக்கப்பட்டும் காந்திக்கு பரிசு கொடுக்க நோபல் சமாதானப் பரிசுக்குழுக்கள் மறுத்தன என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. காந்திக்கு பரிசு கொடுத்தால் பிரித்தானியாவுடன் உள்ள உறவு பாதிக்கப்படும் என பரிசுக்குழுவினர் அஞ்சினர்.
சமாதானப்பரிசு பெற்ற பர்மிய மனிதவுரிமைவாதியான ஆங் சான் சு சீ பர்மாவில் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மை முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கவில்லை என்று பலராலும் குற்றஞ்சாட்டப்படுகிறார்.
இதனிடையே 2011இல் சமாதானப்பரிசு பெற்ற லைபீரியாவைச் சேர்ந்த லேமா குபோவி தன்னுடன் பரிசைப் பகிர்ந்து கொண்ட லைபீரிய ஜனாதிபதி ஜோன்சன் சேர்லிவ்வை கடுமையாகச் சாடியுள்ளார். ஜனாதிபதி குடும்பம் ஊழல் செய்வதாக லேமா குபோவி கூறுகிறார்.

# லிபியாவிலும் ஈராக்கிலும் தொடரும் வன்முறைகள்

கடந்தவாரம் சுமார் 500 ஆர்ப்பாட்டக்காரர்கள் லிபிய நாடாளுமன்ற வளாகத்தில் புகுந்து பானிவாலிட் நகர் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு கோரினர். கடாபிக்கு ஆதரவாக இறுதிவரை இருந்த பானிவாலிட்


WINNERS
INSURANCE AND INVESTMENT SERVICES

பூரணஆயுள் காப்புறுதிக் கட்டணங்கள் தொடர்ந்தும் அதிகரிக்கின்றன !!
குறுகியகால (TERM) காப்புறுதிக் கட்டணங்கள் என்றும் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளன !!
மேலும் தாமதியாமல் இன்றே உங்கள் காப்புறுதியை பெற்றுக்கொள்ளுங்கள் !!

NO BODY CAN BEAT OUR RATES ON LIFE & MORTGAGE INSURANCE
COMPARE OUR RATES - ஒப்பிட்டுபாருங்கள் எமது கட்டணங்களை

WHOLE LIFE (பூரண காப்புறுதி) INSURANCE RATES ☑

| | $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
|---|---|---|---|---|---|---|
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 20 | 31.45 | 26.03 | 60.56 | 47.74 | 111.63 | 85.98 |
| 25 | 35.72 | 30.50 | 70.54 | 57.95 | 131.58 | 106.40 |
| 30 | 43.74 | 36.99 | 91.68 | 77.90 | 173.85 | 146.30 |
| 35 | 53.55 | 44.71 | 122.55 | 103.96 | 235.60 | 190.05 |
| 40 | 68.85 | 55.35 | 158.89 | 125.35 | 304.87 | 239.94 |
| 45 | 92.61 | 76.32 | 212.58 | 171.13 | | |
| 50 | 114.75 | 98.01 | 257.71 | 224.06 | | |

WHOLE LIFE 20 YEARS PAY INSURANCE RATES☑
20 வருடங்களில் கட்டிமுடிந்தபின்பும் தொடரும் பூரண ஆயுள் காப்புறுதி

| $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
|---|---|---|---|---|---|
| MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 56.83 | 47.33 | 120.92 | 100.58 | 216.37 | 167.41 |
| 63.75 | 52.67 | 136.11 | 110.45 | 251.25 | 181.89 |
| 75.51 | 66.82 | 170.33 | 144.23 | 323.55 | 265.48 |
| 91.53 | 79.00 | 208.68 | 173.03 | 395.83 | 329.40 |
| 111.14 | 98.46 | 256.99 | 222.08 | 507.51 | 408.03 |
| 144.27 | 120.78 | 332.55 | 275.63 | | |
| 172.08 | 152.01 | 414.45 | 346.50 | | |

TERM (குறுகியகால காப்புறுதி) INSURANCE RATES RATES ☑

| | $250,000/= | | | | $500,000/= | | | | $1,000,000/= | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | |
| AGE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 25 | 12.37 | 9.68 | ☺17.10 | 13.06 | 18.00 | 12.83 | 28.98 | 19.48 | 28.35 | 17.10 | 46.80 | 30.40 |
| 30 | 12.37 | 10.35 | 17.55 | 13.06 | 18.45 | 14.25 | 29.25 | 21.38 | 29.25 | 19.95 | 50.40 | 35.15 |
| 35 | 12.15 | 10.13 | ☺18.00 | 14.18 | ☺18.54 | ☺14.99 | ☺27.18 | ☺21.60 | 30.15 | ☺24.66 | ☺50.22 | ☺37.89 |
| 40 | 15.75 | 13.05 | ☺24.57 | ☺18.63 | ☺23.85 | ☺18.95 | ☺39.51 | ☺27.45 | ☺40.68 | ☺28.71 | ☺69.84 | ☺50.40 |
| 45 | 22.73 | 16.15 | ☺36.00 | 27.45 | ☺32.27 | ☺21.38 | ☺60.53 | ☺46.40 | ☺57.60 | ☺37.35 | ☺116.64 | ☺85.95 |
| 50 | 32.18 | 23.40 | ☺59.85 | ☺42.30 | ☺51.30 | ☺35.37 | ☺104.76 | ☺73.17 | ☺96.39 | ☺66.60 | ☺205.20 | ☺141.57 |

☺ IF YOU HAVE AUTO & HOME INSURANCE WITH RBC INSURANCE, YOU MAY GET AN ADDITIONAL 10% DISCOUNT☑

உங்கள் முதலீட்டு திட்டங்களையும் (RRSP. PENSION PLANS), குழந்தைகளுக்கான முதலீட்டு திட்டங்களையும் (RESP) சகலவிதமான ஆயுள் காப்புறுதிகளையும் சிறப்புக் கட்டணத்தில் பெற்றுகொள்ள, சரியான ஆலோசனைக்கு அழையுங்கள்



RUBAN
416 953 8036
E:mail : winnersinsurance@bell.net
Web : winnersinsurance.com

☑ SOME CONDITIONS APPLY. ALL RATES ARE NON SMOKER RATES & SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. RATES ARE QUOTED AS OF 12th. October 2012.

நகர்மீது அருகிலுள்ள மிஸ்றாட்டா நகரிலிருந்து அரசுக்கு ஆதரவான ஆயுதக்குழுக்கள் தாக்குதல்களை மேற் கொண்டுவருகின்றன. இச்சண்டையில் 22பேர் கொல்லப்பட்டு 200 பேர் வரை காயப்படுத்தப்பட்டதாக லானா எனப்படும் லிபிய அரச செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது. கடாபி கொல லப்பட்டு ஒரு வருடமாகியும் லிபியாவில் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஈராக்கில் நிலைமை இன்னும் மோசமாகவுள்ளது. ஒவ்வொரு வாரமும் குண்டுவெடிப்புக்களில் மட்டும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப் படுகின்றனர். ஈராக்கிய நீதிமன்றம் ஒன்று உபஜனாதிபதிராறிக் அல்கசேமிக்கு கொலைக்குழுக்களை ஆதரித்தற்காக மரணதண்டனை விதித்துள்ளது. ஆப்கானிஸ்தான், ஈராக, லிபியா போன்ற நாடுகளில் மேற்குநாடுகள் நேரடியாகத் தலையிட்டு ஆட்சிமாற்றங்கள் செய்துவிட்டு அங்கெல்லாம் ஜனநாயகம் வந்துவிட்டதாகக் கூறினாலும் வன்முறைகள் அங்கு தலை விரித்தாடுவதையே மேற்படி சம்பவங்கள் காட்டுகின்றன. "Nothing is settled until it is settled right" என்ற வாசகத்தை மேற்குநாடுகள் நினைவுகொள்ளவேண்டும்.

### கலோவீன் வருகின்றது, கவனம்

பென்சில்வேனியாவின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி ஒருவர் அவரது சொந்தக்காரர் ஒருவரால் தோளில், கையில், முதுகில் எனப் பல பகுதிகளில் சுடப்பட்டிருக்கின்றார். அந்தச் சிறுமி அணிந்திருந்த கறுப்பு உடையும் கறுப்புத் தொப்பியும் வெள்ளைக் குஞ்சத்தையும் பார்த்த அவர், அவளை ஒரு skunk எனத் தவறாகக் கருதியதே தற்செயலாக நடந்த இந்த அசம்பாவிதத்துக்குக் காரணம் என்கின்றனர், பொலிசார்.

## இனியில்லை நியூஸ்வீக் அச்சுப்பிரதிகள்

ரைம் சஞ்சிகைக்கு அடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரிய சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருந்த நியுஸ்வீக் சஞ்சிகை தனது அச்சடிக்கப்பட பிரதிகளை விநியோகிப்பதை நிறுத்தவுள்ளது. அச்சடிக்கப்பட்ட பிரதிகளுக்கு பதிலாக நியுஸ்வீக் இனி இன்டர்நெட் சேவையை மட்டுமே செய்யும். அதுவும் கட்டணம் செலுத்தியோருக்கு மட்டுமே கிடைக்கும்.

நியுஸ்வீக் சஞ்சிகை ஒரு முன்னாள் ரைம் சஞ்சிகையின் பத்திரிகையாளரான Thomas Martyn என்பவரால் 1933 ஆண்டு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் பிரதி 1933 ஆம் ஆண்டு 17 ஆம் திகதி 10 அமெரிக்க சதம்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. அப்போது இதன் ஆண்டு சந்தா 4 டொலர் ஆக இருந்தது.

1937 ஆம் ஆண்டு முதல் இதன் பெயர் Newsweek என மாற்றப்பட்டு சர்வதேச பிரதிகளும் வெளியிடப்பட தொடங்கியது. அமெரிக்காவில் இதன் இறுதி அச்சிட்ட பிரதி இந்த வருடம் மார்கழி மாதம் 31 ஆம் திகதி வெளிவரும். அதன் பின்னர் எல்லாமே Digital தான்.

ஆதியில் இலாபகரமானதாக இருந்த இந்த சஞ்சிகை அண்மைக்காலங்களில் நட்டம் அடையத்தொடங்கியது. கடந்த 2009 ஆம் ஆண்டு மட்டும் விளம்பர வருமானத்தில் 37 வீத விழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக 29.3 மில்லியன் நட்டம் கண்டது. அடுத்த வருடமும் முதல் 3 மாதங்களுள் 11 மில்லியன் நட்டம் கண்டது. அந்த வருடம் ஆவணி மாதம் இந்த சஞ்சிகை ஒரு டொலருக்கு விற்பனை செய்யப்பட்டது. இதனை கொள்வனவு செய்தவரே இந்த நிறுவனத்தின் பாரிய கடன்களையும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

2003 ஆம் ஆண்டளவில் உலக அளவில் 4 மில்லியன் பிரதிகளுக்கும் மேலான விற்பனையை கொண்டிருந்தாலும் இதன் விற்பனை 2010 இல் 1.5 மில்லியன் ஆக குறைவடைந்தது. இதன் மாற்று மொழி பிரதிகள் அவற்றின் மீள் பதிப்பு உரிமை கொண்டோர் விரும்பின் தொடர்ந்தும் அச்சிட பிரதிகளை வெளியிடும்.

## பூகம்பத்தால் சிறைவாசம் பெற்ற விஞ்ஞானிகள்

விஞ்ஞானிகளுக்கு சிறைத்தண்டனை இத்தாலியில் 2009 ம் ஆண்டு , 6.9 பரிணாம அளவில் நிகழ்ந்த பூமி அதிர்ச்சியின் போது 300 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர், 1,500 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அதை நேரத்துடன் அறிவித்து இத்தாலிய மக்களை எச்சரிக்கை செய்யவில்லை என்ற காரணத்தினால் தேசிய அபாயத்தடுப்பு ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக இருக்கும் 7 விஞ்ஞானிகளுக்கு இத்தாலிய நீதிமன்றம் 6 வருடத் சிறைத்தண்டனையை தற்போது வழங்கியுள்ளது.

## மோடி மீதான பிரித்தானிய பகிஸ்கரிப்பு முடிவு

இந்தியாவிலுள்ள பிரித்தானிய தூதர் ஜேம்ஸ் பெவன் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி யைச் சந்தித்துள்ளார். 2002இல் குஜராத்தில் நடைபெற்ற கலவர ங்களின் பின் பிரித்தானியாவும் ஏனைய மேற்கத்திய நாடுகளும் மோடியைப் பகிஸ்கரித்துவந்தன. கலவரங்களைத் தடுப்பதற்கு மோடி முயற்சிக்கவில்லையென மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டின. அத்துடன் மேற்குநாடுகளின் வீசாவும் மோடிக்கு மறுக்கப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக மோடி வரக்கூடிய வாய்ப்புள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு முதலீட்டில் குஜராத் முன்னணியில் இருக்கிறது. மேலும் குஜராத்தியர் பலர் பிரித்தானியாவில் வசிக்கிறார்கள். இந்நிலையில் மோடியுடன் தொடர்பு கொள்வதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கலாம் என்றும் மோடியைப் பகிஸ்கரிப்பதன் மூலம் ஒன்றையும் சாதிக்கமுடியாது என்றும் மேற்கத்திய நாடுகள் தற்போது கூறுகின்றன.

இச்சந்திப்பை மனிதவுரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

# பனிக்காலம் வரும் முன்னே, காய்ச்சல் வரும் பின்னே!

## தடுக்கும் வழிகள் என்ன?

**ஜோர்ஜ்**

மெதுமெதுவாக குளிர் வந்து, சற்றே உதறல் எடுக்கத் தொடங்கி விட்டது. வழமை போல, இந்த காலநிலை மாற்றத்திற்கு உடல் ஈடு கொடுக்க முடியாமல் போக, தொற்றுகின்ற வைரஸ் ஒரு தடவை காய்ச்சலை வர வைத்து, உலுக்கி விடும்.

ஒரு இறாத்தல் மருந்தை விட, ஒரு அவுன்ஸ் முற்காப்பு மேலானது என்கிறது வைத்தியம். எனவே, நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், நோய் வந்தால் மற்றவர்களுக்கு தொற்ற விடாமல் இருக்கவும் சில முற்காப்புகளை மேற்கொண்டால், காய்ச்சலில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

முன்கூட்டியே நோய்த் தடுப்பு ஊசிகளை முதியோரும், குழந்தைகளும் பெறுவது உகந்தது. எதற்கும் குடும்ப வைத்தியரின் ஆலோசனையுடனேயே இந்த நோய்த் தடுப்பு ஊசிகள் பெறப்பட வேண்டும்.

நோய் வந்தவர்கள் மற்றவர்களுக்கு தொற்றாமல் இருக்க, தும்மும்போது தங்கள் சட்டைகளால் மூடிக் கொண்டு தும்முவது நல்லது. காற்றில் பறக்கும் கிருமிகள் வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு இலகுவாய் தொற்றும்.

நோய் பீடிக்காத அதிஷ்டக்காரர்கள் அடிக்கடி தங்கள் கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவ வேண்டும். முக்கியமாக பலர் பயன்படுத்தும் பகிரங்க இடங்களான பொதுக் கழிபறைகள், அலுவலகங்கள், எலிவேட்டர்கள் போன்றவற்றைப் பயன்படுத்திய உடன் கைகளைக் கழுவ வேண்டும். கிருமிகள் காற்றில் நீண்ட நேரம் உயிர் வாழக் கூடியன.

சமையலறைப் பஞ்சுகளைப் பாவிப்பதைக் குறைக்க வேண்டும். காரணம் அதில் உள்ள ஈரப்பதன் பக்ரீரியாக்கள் வாழ உதவும். இதற்குப் பதிலாக துணிகளைப் பயன்படுத்தி துடைத்த பின்னால், தோய்த்துக் காய வைக்கலாம். தினசரி இந்த துணிகளை மாற்ற வேண்டும்.

கையால் கழுவுவதை விட, உணவுத் தட்டுகளை கழுவும் இயந்திரத்தைப் பாவிப்பது கிருமி அகற்ற பெரிதும் உதவும்.

வீட்டிற்குள் ஹியுமிடிபையர் கருவியைப் பயன்படுத்த வேண்டும். குளிர் காலத்தில் காய்ச்சல் வருவதற்கான காரணம், வெளியில் உள்ள நீரின் அளவு குறைவதால், கிருமிகள் தொற்றும் தொண்டைப் பகுதி வரண்டு இருப்பதே. வரண்ட தொண்டையில் வைரஸ்கள் வேகமாய் பெருகும். எனவே, வெளியில் உள்ள நீரின் அளவைக் கூட்ட, இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம். வெளியில் உள்ள நீரின் அளவு கூடி, தொண்டையில் ஈரப்பதன் அதிகரிக்க, கிருமித் தொற்றுக் குறையும்.

கைகளைக் கழுவும் போது, சூடான நீரில் பதினைந்து செக்கன்களுக்கு சவர்க்காரம் பயன்படுத்தி கைகளைக் கழுவ வேண்டும்.

மற்றவர்களின் கைகள் படும் இடங்களான, தொலைபேசிகள், றிமோட் கருவிகள், ஏறும் படிகள், கதவுத் திறப்பான்கள் போன்றவற்றை அடிக்கடி துடைக்க வேண்டும்.

இந்த முறைகளைக் கைக் கொண்டு இந்த குளிர் காலத்தில் காய்ச்சல் பீடிக்காமல் தப்பித்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது வேலைக்கு கட் அடிக்க வேண்டும் என்று எண்ணம் வந்தால், இருமிக் கொண்டே காய்ச்சல் என்று மூக்கால் அழுங்கள். பயன் கிடைக்கலாம்.

## அறிவித்தல்

மிசிசாகா இந்து மகாசபை வருடாந்தப் பொதுக்கூட்டம் நவம்பர் 04, 2012, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இந்து மகாசபையின் 1808 Drew Road இல் அமைந்துள்ள ஜெயதுர்க்கா ஆலய மேல் தளத்தில் நடைபெறவுள்ளது.

உறுப்பினர்களுக்கான தகைமை உள்ள அனைவரும் தயவு செய்து வருகை தந்து தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஒத்துழைப்பினையும் வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

நிர்வாகம்


SUPER SAVINGS
Throughout The Store
Memory Foam Mattress
UP TO 40% OFF
4 Pc Sofa Set W/Coffee Table
Bonded Leather
$899
$399
Memory Foam Mattress
From
$999
Lowest Price Guaranteed
Colour Choices Available
Bonded Leather
Sectional Sofa
$949
Bonded Leather
$999
Double Bed
From
$349
Bonded Leather
$1199
3 Pc Sofa Set W/5/Recliners
Top Grain 100% Genuine Italian
Leather Sectional Sofa W/ 4 RECLINERS
$2399
Complete Bedroom Set
$899
Bonded Leather
$999
3 Pc Sofa Set
Complete Bedroom Set
$1199
$299
$949
Complete Bedroom Set
$999
7pc Dinette
$599
Italian Wardrobe
$599
$139
Single
Folding Bed
$149
Futon Bed
$499
Bench
$299
$99
$109
$199
$299
Sunflowers
furniture
3024
KENNEDY RD.
416.609.8556

# இந்தியாவால் இலங்கை தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க முடியுமா..?


சிவா ஈஸ்வரமூர்த்தி

மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களின் தற்போதைய ஏக தலைமை என்று தம்மைக் கூறிக் கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசின் அழைப்பை ஏற்று இந்தியா சென்று திரும்பிருக்கின்றது. இந்தியப் பிரதமர், எதிர் கட்சித் தலைவர் உட்பட பலரையும் சந்தித்து அளவளாவியிருக்கின்றது. வழமைபோல் இந்தியாவும் நாம் தமிழ் மக்களை கை வீடப்போவதில்லை என்று கூறியிருக்கின்றனர். கூடவே இந்திய எதிர்கட்சித் தலைவர்களும் இந்தியாவில் பல கட்சிகள் இருந்தாலும் இலங்கை தமிழர் விடயத்தில் நாம் எல்லோரும் ஓரணியில் நின்று ஒருமித்த கருத்தையே கொண்டிருக்கின்றோம் என்று நம்பிக்கை தரும்படியாக பேசி இரு க்கின்றார்கள். இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழர் தரப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்திய அரசு, எதிர்க்கட்சித் தலைவர்களுடனான சந்திப்பு வெற்றியளித்துள்தாக அறிவித்திருக்கின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தனது சூழுரையில் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா பொறுமை காத்து வருவதாகவும், அந்தப் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்று தங்களிடம் தெரிவித்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இதே போல் இந்திய எதிர்கட்சித் தலைவர் ”இலங்கைத் தமிழ் மக்களை இந்தியா கைவிட மாட்டாது. இந்தியாவில் ஆட்சிகள் மாறலாம். ஆனால் நாம் ஒரே அணியாக நின்று இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண முயல்வோம்“ என்று முழங்கியிருப்பதாக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். இந்திய விஜயம் பற்றி பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் இந்திய விஜயம் வெற்றியளித்துள்ளதாகவும் எதிர்காலத்தில் இலங்கை தமிழர்கள் சமத்துவம், கண்ணியம், நீதி மற்றும் சுய மரியாதையுடன் வாழ்வதற்கு இந்திய அரசு பெருமுயற்சி எடுக்குமென்று உறுதியளித்ததாகவும் தெரிவித்திருக்கின்றார்.

மறு புறத்தில் இலங்கை அரசு தரப்பில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எங்கு சென்று பேசினாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு இறுதியில் தம்மிடமே வந்து ஆகவேண்டும் என்ற கோதாவில் பேசியுள்ளனர். இவ் வகையான பேச்சுக்கள் 2009 ம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற பின்னரான கால கட்டங்களில் இலங்கை அரசால் அதிகம் உபயோகிக்கப்படும் சொற்பதங்கள் ஆகும். சாராம்சத்தில் இதில் உண்மைகள் இருப்பதைப் போன்று தோன்றும். ஆனால் இலங்கை அரசு வெளிநாடுகளின் அனுசரணை இனிமேல் இலங்கைத் தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கு தேவையில்லை என்பது அகங்காரத்தின் அடிப்படையில் பேசப்படுவதாகவே உணரப்படுகின்றது. இதில் உண்மைகள் இல்லாமல் இல்லை.





மேலும் யார் மூலமாவது சொல்லி தமிழ்த்தரப்பை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து வரவேண்டிய நிலையில் தற்போது நாம் இல்லை என்ற மமதையான செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே இலங்கை அரசின் இது போன்ற அறிக்கைகள் செய்தி சொல்லி நிற்கின்றன.

இலங்கை ஒரு காலத்தில் எதற்கும் (தமிழர் பிர்சனைக்கு மட்டும் அல்ல) இந்தியாவின் அனுசரணையை நம்பியிருக்கும் நிலையில் தனது வெளிநாட்டு உறவுகளை வைத்திருந்தது. ஏனைய நாடுகளும் இந்தியா ஊடாகவே அல்லது இந்தியாவை மீறி இலங்கைகுள் தமது செயற்பாடுகளை செயன்படுத்து முயலவில்லை, விரும்பவில்லை. ஆனால் போருக்கு பிந்தைய இலங்கையில், சீனா வின் இலங்கை மீதான உறவு நெருக்கம் இலங்கையை இந்தியா சீனா என்ற இரு இயந்திரத்தில் பறக்கும் விமா ன நிலைக்கு தள்ளியிருக்கின்றது. தள்ளியிருக்கின்றது என்பதைவிட இலங்கையின் இராஜதந்திர நகர்வு இதனை நிறுவி இருக்கின்றது என்பதே உண்மை. இந்த விமானத்தின் ஒரு இயந்திரத்தில் கோளாறு என்றாலும் மற்றய இயந்திரத்தின் உதவியுடன் பறந்து செல்லும் உறுதிப்பாட்டை இலங்கை தற்போது கொண்டுள்ளது. சீனா, இந்தியா என்ற இரு நாடுகளும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும், ஏன் உலகிலும் அடுத்த பொருளாதார வல்லரசுகளாக துடிக்கும் இரு முகாங்களாக வளர்ந்து வரும் நிலையில் இவ்விருநாடுகளையும் ஒருவருக்கு ஒருவரைக் காட்டி தன்னை தற்காத்து கொள்ளும் பொறி முறையை இலங்கை கற்றுக் கொண்டுள்ளது. இதன் வெளிப்பாடுகள் இலங்கை அரசின் இந்தியா மீதான பாராமுகமும், இனி தனக்கு யாரின் அனுசரணையும் தேவையில்லை என்பது போன்ற இலங்கை அரசின் அறிக்கைகள், செயற்பாடுகள் ஆகும். இதில் யார் என்பதில் பெரும்பாலும் இந்தியாவே தொக்கு நிற்கின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்காக இந்தியா எந்த வகையிலும் மூக்கு நுளைப்பதை இலங்கை அரசு விருப்பவில்லை என்பதையே தற்போதைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு காலத்தில் பேச்சு வார்த்தை மேசைக்கு தமிழர் தரப்பை இழுத்து வருவதற்கு இந்தியாவின் உதவி பல வழிகளில் இலங்கைக்கு தேவையாக இருந்தது. இன்று அப்படி யாரையும் இழுத்தோ, அழைத்தோ வருவதற்குரிய நிலமைகளில் தமிழர் தரப்பு இல்லை என்பதை இலங்கை அரசு நம்புகின்றது. சர்வதேசத்தின் அழுத்தங்களை சீனாவின் அனுசரணையுடன் சமாளிக்கலாம் என்று இலங்கை நம்புகின்றது.

ஐ. நா வின் மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு மூக்கணாங்கயிறு போடலாம் என்பதில் இலங்கை தோற்றுப் போய்யிருக்கலாம், ஆனால் இதில் தமிழர் தரப்பு இராஜதந்திர ரீதியில் வெற்றி பெற்றுள்ளது என்ற சொல்ல முடியாது. இலங்கையில் யார் செல்வாக்கு செலுத்துவது என்ற தங்கள் நாடுகளின் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்காக இலங்கைக்கு எதிராக, ஆதரவாக உலக நாடுகள் செயற்படுகின்றன என்பதே உண்மை.

மாறாக இலங்கையில் வாழும் சகல மக்களும் சமத்துவத்துடனும் சம உரிமையுடனும் வாழுவதை உறுதி செய்தல் என்பதற்காக செயற்படுகின்றன என்று யாரும் கனவு கண்டால் அது கனவாக மட்டுமே இருக்கும். இவற்றை நிஜமாக்கும் இராஜ தந்திரங்கள், செயற்பாடுகள் கடந்த 30 வருடங்களாக இலங்கையின் தமிழ் தலைமைகளிடம் இருக்கவில்லை என்பதே கசப்பான உண்மை. இதுவே தொடர்வதற்கான சாத்தியக் கூறுகளும் தற்போது காணப்படுகின்றன.

சரி, ஒரு பேச்சக்க சர்வதேச அரசுகள் இலங்கையில் உள்ள சகல இனங்களும் (சிறப்பாக தமிழ் மக்கள்) சம உரிமையுடன் வாழுவதற்கு உண்மையில் விரும்புகின்றன என்று வைத்துக் கொள்வோம். இதன் அடிப்படையில்தான் இலங்கை அரசின் போர்க்குற்றம் என்ற விடயத்தை கையில் எடுத்து செயற்படுகின்றன. மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனருத்தாரணம், அரசியல் தீர்வு என்பனவற்றை மேற்கொள்ள முயல்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இப்படியான ஒரு சூழலில் இவற்றை இலங்கை அரசுக்கு ஊடாகவே சர்வதேசம் மேற்கொள்ள முயலும். இலங்கைப் பாராளுமன்றத்தினூடு ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தை கொண்டு வந்து அமுல்படுத்தவே செய்யும். எனவே இவ் வகையில் தமிழர் தரப்பு இலங்கை அரசாங்கத்துடனேயே பேசவேண்டிய சூழ்நிலையே உருவாகும். இதுதே சர்வதேச சட்ட நடைமுறையும் ஒழுங்கும் ஆகும்.

இதனை விடுத்து சர்வதேச நாடுகள் தாமே ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை இலங்கையைத் தவிர்த்து தீர்மானித்து அதனை ஒரு தலைப்பட்சமாக இலங்கையில் அமுல்படுத்த முயல்வர் என்று யாரும் முட்டாள் தனமாக நினைத்தால் உலக அரசி யல் சூழலை சரியாக புரியாதவர்கள் என்ற வகையினருக்குள் தங்களை தாங்களாவே உள்படுத்தியவர்கள் ஆகிவிடுவர். இந்த வகையில் தமி ழர் தரப்பு தன்னை தயார்படுத்தல் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். இதற்கு முதலில் குறைந்த பட்சம் தாயகம், தேசியம், தனியாட்சி என்ற தேர்தல் கூப்பாடுகள் மட்டும் போதாது. மாறாக தமிழர் தரப்பு எதிர்பார்க்கும் ஒரு நியாயாதிக்கம் உள்ள அரசியல் தீர்வுத் திட்டத்திற்கான வரைபு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இருத்தல் வேண்டும். இவ் வரைபு பற்றி பேசுவதற்குரிய புத்திசாதுர்யம், திறமை, இராஜதந்திரம் இவர்களிடம் இருக்கவேண்டும். தற்போதுள்ள தமிழர் தலைமையிடம் இது இருக்கின்றனவா என்பது கேள்விக் குறியே.

உதாரணத்திற்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய விஜயத்தை மேற்கொள்ளவதற்கு சில தினங்களுக்கு முன்பு 13 வது திருத்தச்சட்ட மூலம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையை பாருங்கள். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி கொண்டுவரப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தத்தை தமிழர் இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாக தாம் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை என்றும், ஐக்கிய இலங்கைக்குள் நடைமுறை சாத்தியமுள்ள ஒரு தீர்வையே தாம் நாடுவதாகவும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவிப்பதற்கு பதிலாக இந்திய அனுசரணையுடன் இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட 13 வது திருத்தச் சட்ட மூலத்தை தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கான ஆரம்ப புள்ளியாக கருதுகின்றோம். 13ம் திருத்தச்சட்டமூலம் உருவாக்கப்பட்ட காலகட்டதில் இந்தியா எடுத்த நிலைப்பாடு அன்றைய நிலமைகளுக்கு அமைவாக எடுக்கப்பட்டது. ஆனால் இன்றைய நிலமைகளை வைத்துப் பார்க்கும் போது இது மேலும் செழுமைப்படுதப்பட வேண்டும், முழுமைப்படுத்தப்பட வேண்டும். இதற்கு இந்தியாவின் அனுசரணை, உதவிகளை எதிர்பார்க்கின்றோம்.

இந்தியாவை முற்ற முழுதாக குறை கூறிவிட்டு, அடுத்த சில

11ம் பக்கம் பார்க்க...




# மற்றுமொரு சந்தர்ப்பம்
# TRIDEL இன் புதியவரவு

# TEN YORK
RISING ABOVE IT ALL

TRIDEL®
BUILT FOR LIFE

416.321.6969




Exclusive Brokerage
VIP ACCESS & Special Price
Call for more information

*www.homelifegtarealty.com*

**HOMELIFE/GTA REALTY INC.**
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED

HOMELIFE HIGHER STANDARDS

GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2.
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3.

Off: 416.321.6969
Fax: 416.321.6963

Off: 905.712.2666
Fax: 905.712.0037

# சூப் திருவிழா

ரதன்

இந்தியக் கிராமமான ஜெராட் வீதியை கண்டு கன காலமாகிவிட்டது. எட்டி ஒருக்கால் பார்த்தால் நல்லது என்ற எண்ணம் என்னை இந்தியக் கிராமப்பக்கமாக இழுத்துச் சென்றது. வூட்பைன் பூங்காவை (Woodbine Park) அண்மித்தபோது அங்கு கூட்டம் ஒன்றைக் கண்டேன். பதினொரு மணிக்கு என்ன கூட்டம்? எட்டிப் பார்த்தால் சூப் திருவிழா. உள்ளே செல்ல முன் விக்கிபீடியாவை எட்டிப் பார்த்தல் நல்லது. இந்த சூப் சேர சோழ பாண்டியரின் கண்டுபிடிப்பல்ல. நல்லது. கி.மு 6000 ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிகின்றது. சூப் ஒரு பிரெஞ்ச் வார்த்தை. இதன் மூலம் லத்தீன் பேச்சு வழக்கான suppa வில் இருந்து பிறந்ததாக கூறுகின்றார்கள். பாரிசில் 1765ல் சூப் கடை ஒன்று முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு வித விதமான சூப்கள் விற்கப்பட்டுள்ளது. 1700 களின் நடுப்பகுதியில் அமெரிக்காவில் வெளியான சமையல் நூல்களில் சூப்பும் ஒரு முக்கிய இடம் பெற்றுள்ளது.

இந்த திருவிழாவை டேவிட்சுசுக்கி பவுண்டேசன் நிதிக்காக சூப்ஸ்ரொக் அமைப்பினர் நடாத்தினர். ரொரண்ரோ நகரின் தேர்ந்து எடுக்கப்பட்ட சமையல் வல்லுனர்களின் (chef) சூப்கள் விற்கப்பட்டன. சுமார் நூறுக்கும் மேற்பட்ட கூடங்கள். மூன்று சூப்கள் 10 டொலருக்கு விற்கப்பட்டன. இவற்றுடன் ஓகானிக் பாண், கோப்பி, தேநீர் போன்றனவும் விற்கப்பட்டன. சுமார் முப்பதாயிரம் பேர் கலந்து கொண்டதாக விழா அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். சில வருடங்களுக்கு முன்னர் வீதியில் கைகோர்த்து போராட்டம் நடாத்திய போது 1010 வானொலி தமிழ் சமையல் வல்லுனர்கள் வேலைக்கு செல்லாவிடில் ரொரண்ரோவின் உணவகங்கள் பாதிக்கப்படும் என கூறியதாக ஒரு ஞாபகம். அந்த ஞாபகத்துடன் தமிழ் சூப் எங்கையாவது கிடைக்குமா என அங்கு வாங்கிய சூப்க் குவளையுடனும் கரண்டியுடனும் உலா வந்தேன்.

சகல மரக்கறிகளிலும் சூப்கள் இருந்தன. வழமையாகவே நல்ல உணவிற்கு எதிரி நான். பாணும் சம்பலும் பிளேன் ரீயும் சாப்பிட்ட நாக்கிற்கு சூப்பெல்லாம் உள்ளே செல்லாது. ஒரு கூடத்தில் ரசத்தை கொட் சூப்பென கூறித் தந்தார்கள். நன்றாகத்தான் இருந்தது. என்ன சோற்றை விற்கத் தவறிவிட்டார்கள். கடைசியாக ஒரு மாதிரி ஒரு தமிழரைக் கண்டுபிடித்தேன். சோளத்தில் செய்யப்பட்ட சூப் ஒன்றை தந்தார். இவர்களது கூடத்தில் கூட்டம் அதிகம். விசாரித்ததில் சூப் கடைக்காரர் தனது பெயரான ரவியில் இரவிசூப் என்ற கடை ஒன்றையல்ல மூன்றை டவுன்ரவுன் ரொரண்ரோவில் வைத்திருக்கின்றார். இவரது படத்தை அடிக்கடி ரொரண்ரோ ஸ்ராரில் கண்டிருப்பீர்கள். பார்ப்பதற்கு எளிமையாக இருந்தார். ரொரண்ரோ ஸ்ரார், நவ் பத்திரிகைகள் ரொரண்ரோவில் ருசியான சூப் தயாரிப்பவர்கள் பட்டியலில் முதன்மை இடத்தை இவருக்கு பல தடவைகள் வழங்கியுள்ளன. அவரிடமே கேட்டேன் "அண்ணை கூழ் எங்காவது கிடைக்குமா?" கூழைப் போன்ற ஒன்று ஒரு பக்கத்து கூடத்தில் உள்ளதாக கூறினார். அங்கு எல்லா உணவுகளும் கலந்து கடும் உறைப்புடன் ஒரு சூப் தந்தார்கள். நன்றாக இருந்தது. பிளென் ரீதான் கிடைக்கவில்லை.

இந்தியாவில் இருந்த காலங்களில் கடும் வெயிலில் திரிந்து விட்டு வரும் பொழுது மரத்தடியில் மண் பானையில் மோர், பச்சை மிளகாய் கலந்து தருவார்கள். பத்து சதம் (1980களில்) பஞ்சாமிர்தமாயிருக்கும். ஆடிக் கூழ் என்பது இலங்கை இந்தியாவில் பிரபல்யம். இது ஆடி மாத்தில் அம்மனுக்கு கூழ் காச்சி படைப்பதாக ஒரு மரபு இருப்பதாக தெரிகின்றது. அவுஸ்திரெலியா விக்ரோரியாவில் ஆடிக் கூழ் விழா நடாத்தியுள்ளார்கள். ஒடியல் மாக் கூழ் இலங்கையில் பிரபல்யமானது. கேழ்வரகு கூழ் நல்ல சத்துணவு என்பார்கள். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என ஒரு பழமொழியே உண்டு. காலப்போக்கில் கூழ் என்பது எப்பவாவது ஒரு தடவை செய்வதாக மாறிவிட்டது. புலம் பெயர்ந்த பின்னர் தண்ணிப் பாட்டிகளில் கூழ் செய்யப்படுவதுண்டு. இதற்கு மேல் நாங்கள் கூழுக்கு எதுவும் செய்யவில்லை. மீசையிலே கவனத்தை அதிகமாக செலுத்திவிட்டோம். இப்போ மீசையும் இல்லை.

சென்னையில் அடையாறில் விதை இயற்கை அங்காடி என்ற இயற்கை விதை, தானியங்கள் விற்கும் கடை

16ம் பக்கம் பார்க்க..

# இளம் சந்ததியினரின் ஆக்க முயற்சியை ஊக்குவிக்கும் தமிழ் மிரர்

ஊர்க்குருவி

ரொறோன்ரோவில் உள்ள அமைப்புகளான தமிழ் இலக்கியத் தோட்டம், தமிழர் தகவல், கனடா உதயன் போன்றவை குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்பவர்களை வருடாவருடம் இனம் கண்டு கௌரவித்து வருகின்றன. இவற்றில் சில, விண்ணப்பங்களைக் கோரி அவற்றில் இருந்து தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் அதே வேளையில், ஏனையவை தமக்குத் தெரிந்த வட்டத்தில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.

அவ்வகையில், தனது எட்டாவது ஆண்டில் கால் பதிக்கும் தமிழ் மிரர், தினக்குரல், வீரகேசரி போன்ற முன்னணிப் பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரான திரு.ஆ. சிவனேசச்செல்வன் அவர்களுக்கு இதழியல் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. மேலும் சமூகசேவை விருதினால் நர்த்தனாலாயா நடனக்கல்லூரி ஆசிரியர் கீதா மூர்த்தியும் இளம் தலைமை விருதினால் அபிசேகாவும் கௌரவிக்கப்படப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு மேலாக, எமது இளம் சந்ததியினரின் ஆக்க முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக உலகளாவிய ரீதியில் ஒரு சிறுகதைப் போட்டியை நடாத்தி முதல் 5 இடங்களுக்கும் மிகப் பெறுமதியான பரிசுகளை ($500, $300, $200, $150, $100) தமிழ் மிரர் வழங்கியது மிகவும் பாரட்ட வேண்டிய நல்லதொரு விடயமாகும். The Pleiades என்ற சிறுகதையை எழுதிய சிவகாமி விஜேந்திரா சிறந்த சிறுகதைக்கான முதலாவது பரிசை Frances Harrison (BBC journalist) இடமிருந்து பெற்றுக்கொண்டார்.

தமிழ் மிரரின் இந்த விழா கடந்த வெள்ளிக்கிழமை 19ம் திகதி Scarborough Convention Centre இல் விமரிசையாக நடந்தது. விழாவுக்கு இலங்கைத் தமிழ் மக்களில் மிகவும் அக்கறை கொண்ட முன்னாள் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் Robert Evans அவர்கள் பிரதம விருந்தினராகவும் முல்லைத்தீவிலிருந்து உயிர் பிழைத்தவர்களின் கதைகளைச் சொல்லும் Still Counting the Dead என்ற புத்தகத்தின் ஆசிரியரும் பிபிசியில் பணியாற்றும் பிரிட்டிஷ் ஊடகவியலாளருமான Frances Harrison சிறப்பு விருந்தினராகவும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரினதும் பேச்சுக்கள் பல அறியாத் தகவல்களை சபையினருக்கு வழங்கியது. தனது Frances Harrison தனது இலங்கை அனுபவம் பற்றி விவரித்த போது சபை மிகவும் நிசப்தமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. விழாவில், பேச்சுக்களின் இடைஇடையே நிரோதினி பரராஜசிங்கத்தின் மாணவியர்கள் நடன விருந்தையும் Super Singers புகழ் சிறீனிவாஸ், மற்றும் பிரபல பாடகர்கள் பிரபா, எலிசபெத் மாலினி ஆகியோர் அருமையான இசையையும் வழங்கி சபையினரை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர்.

இவற்றுடன் விழா உரிய நேரத்துக்கு முடிந்திருந்தால் மிகவும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் நிகழ்ச்சி நிரலில் இல்லாத போதும் அங்கு வந்திருந்த அரசியல்வாதிகள் யாவரும் பேச அழைக்கப்பட்டனர். பாவம் அவர்கள். அனைத்து விழாக்களுக்கும் கூப்பிட்டுப் பேசச் சொன்னால் அவர்கள் என்ன தான் செய்வார்கள்? இப்படியாக நிகழ்ச்சி நீடித்ததில் விருது வழங்கும் போது நேரம் 11 மணிக்கு மேலாகி விட்டது. மீதியைச் சொல்லவும் வேண்டுமா? ஓரளவு பாதி வெறுமையாகிப் போன சபையின் முன்னிலையில் விருதாளர்கள் தமது விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். அதனாலும் தமிழ் மிரரின் விழாச் சிறப்புமலரில் சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் பற்றிக் குறிப்பிடாததாலும் ஏனைய பரிசுகளைப் பெற்றவர்களின் பெயர்களை இங்கு குறிப்பிட முடியாதுள்ளது.




## இந்தியாவால்...

தினங்களிலேயே இந்தியாவிடமே பாத்திரத்தை ஏந்தும் சாணக்கியமற்ற செயற்பாட்டையே தமிழர் தரப்பு தற்போதும் செய்திருக்கின்றது. இது தான் தமிழருக்கு தலைமை தாங்கு கின்றோம் என்று ஏகபோகம் கொண்டாடிய யாபேரும் பொன்னம் பலத்து காலத்திலிருந்து இன்று வரை செய்கின்றனர். இதனை மீறி யாரும் சரியான தலைமை உருவாக முற்பட்டால் அவர்களைத் துரோகி என்று பட்டம் சூட்டி இல்லாமல் செய்து விடுவர் இந்த ஏகபோக சிந்தனையாளர்கள். எனவே தமிழ் மக்களுக்கான தீர்வு ஏற்படுவதில் பெரும் தடங்கல் எங்கள் பக்கத்திலேயும் இருக்கின்றது.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 13 வது திருத்தச்சட்ட மூலம் சம்பந்தமான அண்மைய கருத்தை வலியுறுத்துவது போல் 13ம் திருத்தச் சட்டத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் அல்லது காலசூழ்நிலைகளுக்கு அமைவாக திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என கோதபாய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். எப்போதும் இப்படித்தான் நாங்கள் எடுத்துக் கொடுக்க அவர்கள் அதனை ஆமோதித்து, முடித்து வைக்கின்றார்கள். இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை பிரேமதாஸ, ஜேவிபி, தமிழீழ விடுதலைப் புலிகள் மூவரும் இணைந்து இல்லாமல் செய்தனர். இதற்கு கலைஞரின் ஆசீர்வாதமும் இருந்து. இதனை நீண்ட ஆண்டுகளுக்கு பின்னர் ஜேவிபி துண்டு துண்டாக்கியது நீதி மன்றம் சென்று சட்டம்? இன் மூலம். ஆமாம் நாம் ஏடுத்துக் கொடுக்க அவர்கள் முடித்து வைத்தார்கள். இப்படியே போய் இன்று கிழக்கு மாகாண சபையில் ஒரு தமிழ் அமைச்சரும் இல்லாத நிலையில் நாம் வந்து நிற்கின்றோம். சரி வடக்கு கிடக்குதானே. நாம்தான் ஏக பிரதிநிதிகள் என்று வரிந்து கட்ட தமிழரசுக் கட்சி மட்டும் தயார், ஏனையவர்களை தூக்கி கடாசும் அறிக்கைகள் தற்போது பத்திரிகைகளில் தூள் பறக்கின்றன.

இவ்வாறான நிலமைகளில் இந்தியாவால் இலங்கைத் தமிழர் பிரச்சனை தீர்த்து வைக்கப்பட கூடிய சூழல் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன என்ற முடிவு களுக்கே சாமான்ய தமிழ்மகன் வருவதில் நியாயங்கள் இருக்கின்றன. என்ன 1977 களில் இருந்து சாதாரண பொது மக்களை ஆல் இந்தியா ரேடியோவின் புழகாங்கிதம் அடையச் செய்யும் செய்திகளில் இருந்து தமிழ் நாட்டுத் தலைவர்களின் தேர்தல் வீரவசனம் வரை, நாளை பிறக்கும் தமிழ் ஈழம் என்று சொந்தக் காலை சரியாக, உறுதியாக வைக்காமல் தொப்புள் கொடி உறவை சொல்லி நம்ப வைத்து ஏமாற வைக்கும் நிகழ்வுகளே தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. மறு புறத்தில் டிஎஸ் சேனநாயக்காவில் இருந்து இன்றுவரை இலங்கையை ஆண்ட இலங்கை அரசுகள் தமிழ் மக்கள், சிங்கள் மக்கள் முஸ்லீம் மக்கள் போன்ற இலங்கை வாழ் சகல இன மக்களும் இலங்கையில் வாழும் பல்லின மக்கள் என்ற சகோதர உணர்வுகளுடன் வாழாதிருப்பதில் அளவுகளில் வித்தியாசப்பட்டாலும் ஒரே மாதிரியாகவே செயற்பட்டு வருகின்றன. ■


# மிக முக்கியமானதும் முன்னுரிமையானதும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பே...

Individual Life Insurance, Mortgage Insurance,
Disability Insurance, Critical Insurance,
Non-Medical Insurance, Travel Insurance

Registered Education Saving Plan (RESP)
Registered Saving Plan (RRSP)

**Call**

## Ravi Ponnudurai

**(Insurance Advisor)**

**Direct: 647-868-6475**

*Even During Tough Times,*
*Life Insurance Offers Peace of Mind*



Get the right
Super Visa Insurance
best suited for your needs!




MEGA Financial Group
"Foundation of your financial freedom"

PH28 - 4168 Finch Aveune. E.
Scarborough, ON
M1S 5H6
Bus: 416-293 5559
Fax: 416-293 9409
www.megafinancial.ca

நிலாச்சோறு உணவகம்

# MooonRice

South Indian & Ceylon Restaurant

## Take-Out & Catering



**September 30th, 2012**

**GRAND OPENING SPECIAL!!!**

**2 MONTHS**

**MONDAY** Buy 1 get 1 FREE Pittu Mix

**WEDNESDAY** Buy 2 get 1 FREE Koththu Rotti

**FRIDAY** Buy 1 get 1 FREE Veggie Meals

**3050 Confederation Parkway, Unit 109,**
**Mississauga, ON L53 3Z6**

**905-276-8292**

**Rice & Curry**

1. Rice Chicken Curry.................................6.50
2. Rice Mutton Curry.................................6.50
3. Rice Fish Curry..................................... 6.50
4. Rice Crab Curry.....................................6.50

Served with 3 veg curries



**Briyani**

5. Chicken Briyani...................................... 6.50
6. Mutton Briyani....................................... 6.50
7. Shrimp Briyani....................................... 8.00



**Fried Rice**

8. Chicken Fried Rice.................................6.50
9. Shrimp & Egg Fried Rice......................... 6.50
10. Seafood Fried Rice................................6.50
11. Mixed Fried Rice.................................. 6.50
12. Chicken Hot Garlic with Rice................. 6.50




**Koththu Rotti**

13. Chicken Koththu Rotti........................... 5.50
14. Mutton Koththu Rotti............................5.50
15. Egg Koththu Rotti................................. 5.50
16. Seafood Koththu Rotti........................... 5.50



**Noodles**

17. Chicken Noodle.................................... 6.50
18. Seafood Mixed Noodle.......................... 6.50
19. Shrimp Noodle..................................... 6.50
20. Mixed Noodle.......................................6.50
21. Ceylon Pasta........................................ 6.50
22. Hot Chicken Wings (1lbs)........................8.00

**Pittu**

23. Pittu (3)................................................ 3.00
24. Pittu Mix - Non Veg............................... 6.00
(chicken, shrimp & egg)
25. String Hopper (25) (house made)...............3.50
(served with sothi & sambol)



**Side Dishes**

26. Fish Curry............................................. 6.99
27. Crab Curry.............................................7.99
28. Fried Fish.............................................. 4.00
29. Fried Chicken leg................................... 2.50

Price subject to chaneg without notice

**Business Hours**
**Mon - Sun 7am - 10pm**

# மறுபிறப்பின் அவசியம்!

*பரம் ஜி பார்வையில்...*

அனல்காற்று, புயற்காற்று, பூகம்பம், சுனாமி, சூறாவளி, பெருவெள்ளம், மண்சரிவு விபத்துக்கள் போன்ற பல இயற்கை காரணங்களாலும், மனித உரிமை, இனவிடுதலை, சுதந்திர போராட்டங்கள், யுத்தங்கள் என்ற பெயர்களில் மனிதரால் தோற்றுவிக்கப்படும் சில செயற்கை காரணங்களாலும், இவ்வுலகில் கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை பெற்றிருந்தும் பலர் உடலில் உயிர் உள்ளவரை உணர்வுகளால் காலத்தை வென்று கிடைத்திருக்கும் அரிய பிறவியை முழுமையாக அனுபவித்து சாதனைகள் பல படைத்து இயல்பாக இறப்பதைவிட்டு, இயற்கை மற்றும் செயற்கைக் காரணிகளால் எதிர்பாரா திடீர் மரணங்களை சந்தித்து இம் மண்ணில் வெறும் புள்ளிவிபர சதைப் பிண்டங்களாகி போய் சேர்வதன் காரணம்தான் என்ன?

ஒரு வேளை இதுதான் பெரியோர்கள் சொல்லும் ஊழ்வினைப்பலனோ? அதாவது முற்பிறப்பில் செய்த பாவங்களுக்கு இப்பிறப்பில் கிடைக்கும் தண்டனைகளாக இருக்குமோ?

இயற்கை மனிதருக்கு தரும் அழிவுகளை எப்படி தண்டனைகள் என நாம் கூற முடியும்? இவ்வுலகில் மனிதரை உருவாக்குவதும் முடிவில் அழிப்பதுவும் இயற்கையே. அதனால் இயற்கை அழிவுகளுக்கு பலியாகுபவர்கள் தண்டனைகள் பெறுகிறார்கள் என நாம் சொல்லிவிட முடியாது.

போராட்டங்கள் யுத்தங்கள் போன்ற மனித செயற்கைகளில் அழிக்கப்படும் மனிதர்கள், அதாவது தாமுண்டு தம் வேலையுண்டு என வாழுபவர்கள் திடீரென எதிர்பாராத குண்டு வெடிப்புக்களில் சிதறி கொல்லப்படுவதன் காரணத்தை ஊழ்வினைகளுக்கான, அதாவது முற்பிறப்பில் ஏதோ ஒரு வகையில் பலர் இவ்வாறு அழிக்கப்படுவதற்கு இவர்கள் காரணமாக இருந்ததற்கான தண்டனைகளாக இருக்கலாம் என நாம் எடுத்து கொள்ளலாம்.

மறுபிறப்பொன்று மனிதர்க்கு மிகவும் அவசியம். காரணம், இவ்வாழ்வில் பலர் செய்யும் நன்மைகளுக்கு பலன் ஆக இன்பங்களை அனுபவித்து மீண்டும் ஒரு முறை வாழுவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் என்பதை விடவும், தமது பாதுகாப்புகளை உறுதி செய்து வாழ்ந்த வண்ணம் மற்றய உயிர் மற்றும் உணர்வுகள் பற்றி அக்கறைகள் கொள்ளாது, மனிதப் பேரழிவுகளுக்கு ஏதோ ஒரு வகையில் காரணமாக இருப்பவர்கள் சிலர் நிச்சயம் அவற்றிற்கான தண்டனைகள் பெற்று அனுபவித்து அதே வழியில் உத்தரித்து சாக வேண்டும் என்பதற்காக.



அது சரி. மறுபிறப்பு ஒன்று உண்டு என்று யார் சொன்னது? ஆதாரங்கள் ஏதாவது உண்டா? மனிதர்கள் நம்பிக்கை வைத்துள்ள அத்தனை மதங்களும் சொல்கின்றன உண்டென்று. அத்துடன் அண்மையில் இணையதள செய்தி ஒன்றும் உர்ஜிதம் செய்தது.

சிறிலங்காவின் காலி நகரை சேர்ந்த பதினொரு வயது சிறுவன் மஞ்சுள என்பவன் தனது முற்பிறப்பில் தான் உடுகமக எனும் கிராமத்தில் உதய கெலிம என்ற பெயரில் வாழ்ந்து வந்ததாக சொன்ன தகவல்களை ஆராய்ந்து பார்த்த இடத்தில், உண்மையில் உதய கெலிம என்ற பெயரில் உடுகமவில் வாழ்ந்திருந்த பணக்கார மீன் வியாபாரி ஒருவர் பதினொரு வருடங்களுக்கு முன் தனது முப்பத்தைந்தாவது வயதில் வாகன விபத்தொன்றில் இறந்திருப்பது கண்டறியப்பட்டதாம். சிறுவன் மஞ்சுளவை உதய வாழ்ந்த கிராம வீட்டுக்கு அழைத்து வந்தபோது, உதயவுக்கு மிகவும் பரிச்சயமான இடங்களையும் உறவுகளையும் அவன் அடையாளம் காட்டியதாகவும் செய்திகள் தெரிவித்தன.

அது சரி. மஞ்சுளவின் முற்பிறப்பு ஞாபகங்களுக்கும் இப்பிறப்பு குண்டு வெடிப்பு மரண தண்டனைகளுக்கும் என்ன சம்மந்தம் என்று எண்ணுகிறீர்களா? விசயத்திற்கு வருவோம்.

இன்று கனடாவில் வாழும் பெருமளவு ஈழத்தமிழர்கள் மத்தியில் இருக்கும் முக்கிய பிரச்சனைகள் என்ன? இசைஞானி இளையராசாவின் கச்சேரியா? அல்லது மாவீரர் நினைவுதின கொண்டாட்டங்களா? என்பவைதான். கச்சேரியை காசாக்கு பவர்களுக்கு இளையராசா முக்கியம், மாவீரர் நினைவுகளை சாக்காக்கி உண்டியல்கள் குலுக்குபவர்களுக்கு மாவீரர் தினம் முக்கியம்.

கனடாவில் குடும்பங்கள் உறவுகளுடன் சொகுசாக வாழ்ந்த வண்ணம் தம்மை தார்மிக தமிழீழ போராளிகளாக காட்டி பொது இடங்களில் பீத்தி கொள்ள வேண்டும் என்பதற்காக பலரும், குறைந்த பட்சம் தமது அகதிக்கோரிக்கைகள் இங்கு ஏற்றுக் கொள்ளப்படும் வரையிலாவது அம்மண்ணில் யுத்தம் தொடர வேண்டும் என்ற நல்ல எண்ணங்களுக்காக? சிலரும் என மாதம் தவறாமல் அள்ளி கொடுத்த ஈழவிடுதலை போராட்ட நிதிகளில் வாங்கி குவித்த ஆயுதங்களின் பலனாக இன்று அம்மண்ணில் சிங்கள இராணுவத்தால் விதவைகளாக ஆக்கப்பட்டனர் பல ஆயிரம் அப்பாவி தமிழ் பெண்கள். அவர்களில் சில ஆயிரம் தமிழ் பெண்கள், இன்று வாழுவதற்கு வேறு வழிகள் தெரியாது, தமது வாழ்க்கைகளை பறித்த அதே சிங்கள இராணுவ வீரர்களின் சிற்றின்ப வேட்கைகளை தணிக்கும் விபச்சார வியாபாரம் செய்து வாழும் கீழ்நிலைக்கு கொண்டு வந்ததே தாம் கொடுத்த போராட்ட நிதிப்பணம்தான் என்பதை எண்ணியும் பாராமல், இன்று இங்குள்ள வானொ(ா)லிகள் பத்திரிகைகள் இணைய தளங்களில் முக்கியமாக செய்கின்றனர் வாதம், இளையராசாவா?, மாவீரர் மாதமா?, வாரமாவென? கேவலம், இவர்களை நம்பி தாய் மொழி தமிழ்மேல் வைத்த உயிரின் காரணமாக தமது உடலினை ஈழமண்ணுக்கு தானமாக்கிய அம்மாவீரர்கள் விட்டு சென்ற இரத்த உறவுகளை இவ்வாறு நட்டாற்றில் கைவிட்ட இவ்விழிவுத் தமிழர்களின் கீழ்த்தர செயல்கள் கண்டு வெட்கத்தால் உடல் குறுகி தாம் துயிலும் கல்லறைகளில் அம்மா வீரர் களே திரும்பி குப்புறப்படுத்தாலும் ஆச்சரியபடமுடியாது.

இப்போது புரிகிறாதா பரம்ஜி எதிர்பார்க்கும் மறுபிறப்பின் அவசியம் பற்றி? குற்றம் உணர்ந்த உங்களில் சிலரது உணர்வுகள் குறுகுறுத்து தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்ட போராட்ட நிதி சேர்ப்பு தவறுகளுக்கு பிராயசித்தங்களை இயன்றவரையில் இப்பிறவியிலேயே செய்து கொள்ள வேண்டும் என மனசாட்சி சொல்லுகின்றதா?

உடனே தொடர்பு கொள்ளுங்கள் பூபாளம் பத்திரிகை அலுவலகத்திற்கு, காரணம், முப்பது கோடி புண்ணியம் முப்பது டொலர்களுக்குக் கிடைக்கிறது என்ற தலைப்பில், கிளிநொச்சியில் இயங்கும் மகாதேவ குழந்தைகள் நிலையத்தில் போரினால் பாதிக் கப்பட்ட முன்னூறுக்கும் அதிகமான அனாதை குழந்தைகளை பராமரிக்கும் சேவை நடைபெறுவதாக நமு பொன்னம்பலம் பூபாளம் பத்திரிகையில் நல்ல செய்தி ஒன்று முன்பு சொல்லி இருக்கின்றார்.

அம்மண்ணில் செயற்படும் தொண்டு நிறுவனங்களின் தகவல்களை பெற்று, பாத்திரங்களை அறிந்து பிச்சைகளை இட்டு, தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களை நீங்களும் உங்கள் உறவுகளும் அழுதழுது தொலைக்காமல் பிராய சித்தங்களை தேடி, மறுபிறவிகளுக்காக இன்னமும் காத்திராமல், உங்கள் ஆன்மாக்களுக்கு ஆறுதல்களை தேடுங்கள்.

*பார்வைகள் தொடரும்...*

# கே.பத்மநாதன் தமிழர் பிரதிநிதி அல்ல! மறுக்கிறார் சம்பந்தன்!

தேசிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கான பேச்சைத் தொடங்குவதற்காக அரசின் சாதகமான சமிக்ஞையை எதிர்பார்த்திருக்கிறேன். விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனின் அனுசரணையுடன் புலம் பெயந்தோருடன் அரசு பேசவுள்ளதை அறிந்து நான் ஆச்சரியமடைகின்றேன். அவர் தமிழ் மக்களின் பிரதிநிதி இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

பேச்சை மீண்டும் தொடங்குவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிகழ்ச்சி நிரலை அரசு முன்வைக்குமாயின், பேச்சு மேசைக்கு வரவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அங்கத்தவர்களை நியமிக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசவுள்ளதாக அரசு கூறுவது சர்வதேச சமுதாயத்தை ஏமாற்றும் தந்திரம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

நாம் அரசிடமிருந்து வெற்று வார்த்தைகளை எதிர்ப்பார்க்கவில்லை. பேச்சு தொடங்குவதற்கான நேர்மையான அணுகுமுறையையும் முழுமனதான ஈடுபாட்டையும்தான் நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.



13ஆவது, திருத்தம் நீக்கப்பட வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் ஜாதிக ஹெல உறுமயவும் கூறியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுபோன்ற பேச்சுகள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிடும்.

கே.பி. இலங்கையிலும் இந்தியாவிலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர். இவரை சர்வதேச பொலிஸார் தேடி வருகின்றனர்.

இவருக்கு இதற்கான அதிகாரமோ, தகுதியோ இல்லை. இவர் தமிழ் மக்களின் பிரதிநிதியும் இல்லை.

தமிழ் புலம்பெயர்ந்தோருடன் பேச இவரை ஒரு கருவியாக அரசு பயன்படுத்துவதன் பின்னாலுள்ள நியாயம் எமக்கு விளங்கவில்லை என்றார்.

# "பிங்க் சாரி"




"பிங்க் சாரி" பெண்கள் அமைப்பு (குலாபி காங்க்) புரட்சியிலிருந்து கிடைக்கப் பெறுவது விடுதலை. அப்புரட்சியை மேற்கொள்ள தனி மனிதனோ, ஒரு சமூகமோ முதலில் தான் அடக்கப்படுவதை அறிந்து, கொள்ளல் வேண்டும்.

அடக்கப்படுபவர் அடக்குபவரை, அதிகாரத்தை எதிர்க்க தன்மை, தம்மை வலிமைப்படுத்திக்கொள்ளல் வேண்டும். இவையனைத்தும் சொல்வதற்கு சுலபம் யதார்த்தத்தில் செயல்படுத்தலென்பது நலிந்த மனிதனுக்கு முடியாததொன்றாகவே எப்போதும் இருந்து வருகின்றது. அதுவும் அடக்கப்படுபவர் பெண்ணாகவும் அடக்குபவர் அவளது கணவனாகவுமிருக்குமிடத்தில் குடும்பம், சொந்தங்கள், சமூக அமைப்பு என்று பல காரணிகள் பெண்களின் எதிர்ப்புணர்விற்கு எதிராக அமைந்துவிடுகின்றன. தாம் அடக்கப்படுகின்றோம் என்பதை அறிந்து கொள்வதற்கோ, அதற்கான எதிர்ப்புக் குரலை எழுப்பிப் போராடுவதற்கோ ஒருவர் கல்வியறிவு கொண்டவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. மனதளவில் தன்னம்பிக்கையும், துணிவும் இருந்தாலே போதும் என்பதற்கு உதாரணமாக இந்தியாவின் மத்தியபிரதேசத்தில் பின்தங்கிய மாவட்டமான பண்டாவைச் சேர்ந்த பெண்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய ஒரு அமைப்புத்தான் "பிங்க் சாறி" எனும் அமைப்பு.

பிங்க் சாறியை அடையாளமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு, மனைவியை அடித்துத் துன்புறுத்தும் கணவர்மாருக்கு எதிராக 2006ஆம் ஆண்டு சாம்பட் பால்தேவி எனும் நான்காம் வகுப்புவரை மட்டுமே கல்வி பயின்ற ஒரு சாதாரண பெண்ணினால் ஆரம்பிக்கப்பட்டது. சாம்பட் பால்தேவிக்கு பன்னிரண்டு வயதில் திருமணம் செய்துகொடுக்கப்பட்டது. பதின்மூன்று வயதில் முதல் குழந்தையைப் பெற்று, ஐந்து குழந்தைகளுக்குத் தாயாகிய இவர் ஒரு முன்னாள் அரச சுகாதார ஊழியர்.

2008ஆம் ஆண்டின் கணிப்பின்படி இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களையும், பாரிஸில் ஒரு கிளையுடனும் வளர்ந்திருக்கின்றது இவ்வமைப்பு. இவ்வமைப்பில் அங்கத்தவராக இயங்கிவரும் பெண்கள், தாம் கணவரால் துன்புறுத்தப்படுவதாக ஒரு பெண் புகார் கொடுக்கும் பட்சத்தில் பிங்க் நிற சேலைகளை அணிந்து, கையில் லத்தியுடன் அப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று அவள் கணவரை, தான் இனிமேல் தனது மனைவியை அடித்துத் துன்புறுத்தமாட்டேன் என்று வாக்கு கொடுக்கும் வரை அடித்துத் துன்புறுத்துவார்கள். ஆரம்பத்தில் மனைவியரைத் துன்புறுத்தும் கணவர்களைத் தண்டிக்கும் ஒரு அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த பிங்க் சாறி அமைப்பு, பின்னர் பெண்கள் கல்விக்காவும், குழந்தைத் திருமணம், கட்டாயப் பாலியல் தொழில், சீதன முறை போன்றவற்றிற்கு எதிராக குரல் கொடுத்துப்போராட்டங்களைநடாத்தி வெற்றியும் கண்டிருக்கின்றது. அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் இவர்கள், வழக்கேதுமின்றி கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒரு ஆணுக்காகவும் காவல்நிலையத்தைத் தாக்கச் சென்றிருக்கின்றார்கள்.

இந்தியாவில் பின்தங்கிய கிராமப்புறங்களில் பெண்களுக்கு கல்வியறிவு இல்லாததால் அவர்கள் மிகவும் அநீதிக்கு உள்ளாகின்றார்கள். எங்களுக்கு உதவி செய்ய எவரும் முன்வருவதில்லை. காவல்துறையினரும், அரசாங்க ஊழியர்களும் ஊழலில் ஊறியவர்கள். இவர்கள் ஏழைகளின் தேவைகளை பொருட்படுத்துவதில்லை. எதிராக, அவர்களுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு எதிராகவே இவர்கள் இயங்கி வருகின் றார்கள்.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ள எமக்கு வேறுவழி தெரியவில்லை, அதனால் நாம் சட்டத்தையும், லத்தியையும் கையிலெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். ஆரம்பத்தில் காவல்துறையினரினரால் எமக்குப் பல பிரச்சனைகள் வந்தன. ஆனால் காலப்போக்கில் அவர்கள் எங்களுக்கு உதவிகளையும் செய்யத் தொடங்கியுள்ளார்கள். என்று கூறுகின்றார் சாம்பட் பால்தேவி. அமைப்பில் சேர்ந்து கொள்வதற்கு ஐம்பது ருபாயும், பிங்க் சாறிக்காக நூறு ருபாயும் இவ்வமைப்பினால் அறவிடப்படுகின்றது.

இவ்வமைப்பை மையமாகக் கொண்டு, 2010ஆம் ஆண்டு ரொறொன்டோ சர்வதேச திரைப்படவிழாவில் "பிங்க் சாறீஸ்" எனும் விவரணப்படம் திரையிடப்பட்டது. நோர்வே குறுந்திரைப்பட விழாவில் "குலபி காங்க்" எனும் குறுந்திரைப்படம் 2012ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. தற்போது முழுநீளத் திரைப்படம் ஒன்றும் இவ்வமைப்பைத் தளமாகக் கொண்டு எடுக்கப்பட்டு வருகின்றது. இதில் முன்னணிப் பாத்திரத்தில் மாதுரி தீட்சி நடிக்கின்றார். இத்திரைப்படம் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினத்தன்று வெளியிடப்பட உள்ளது.

பெண் தெய்வங்களை வணங்கும் எம்மக்கள், பெண்களின் சக்தியை அழிப்பவர்களாகவே இருந்து வருகின்றார்கள். பெண்களின் சக்தியை அவர்கள் புரிந்து கொள்ளும் காலம் "பிங்க் சாறி" போன்ற அமைப்புகளால் நிச்சயம் உருவாகும்.

-சுமதி-

# யாருக்கு சொல்லியழ 6

இனப்பெருக்கம் செய்யும் மனிதன், மிருகம், தாவரம், பறப்பன, ஊர்வன போன்ற எல்லா உயிரினங்களும் பொதுவாக ஆண் பால் அல்லது பெண் பால் என்ற இரண்டிலொரு பால் வகையுள் அடங்கும். அத்துடன் குறைபாடுகள் எதுவும் இல்லாதவிடத்து இவ்விரு பால்களும் தமக்கே உரிய உடலமைப்பையும் கொண்டிருக்கும்.


இவ்வாறான பிரத்தியேக உடலமைப்பே இனப்பெருக்கத்தின் அடிப்படை. உயிர் வாழ்வன எல்லாவற்றுள்ளும் இருக்கும் இந்த பால் வேறுபாடின் தோற்றமும் அந்த உயிர்களின் தோற்றமும் அனேகமாக ஒன்றாகவே இருக்கலாம். இதுவே உயிர்களின் தோற்றமாகவும் இருக்கலாம்.

டார்வினின் கொள்கைகூட இவ்விடயம் சம்பந்தமான பைபிளின் கூற்றுக்களை மறுக்க பயன்பட்டதே அன்றி ஆண்பால், பெண்பால் பற்றியோ உயிர்களின் உண்மையான தோற்றம் பற்றியோ எதையும் பெரிதாய் கூறவில்லை. ஆண்பால், பெண்பால் இரண்டும் இயற்கை என்பது மட்டும் உறுதி.

இயற்கை படைத்த மிருகங்களில் ஒன்றான மனித மிருகம் நாகரீகம் அடைந்து மொழியும் ஆற்றலை ஆரம்பித்தது. தான் உருவாக்கிய அந்த மொழி ஆற்றலை பயன்படுத்தி இயற்கையின் படைப்புகளையும் பெயரிட்டது. அவ்வகையில் தான் உருவாக்கிய மொழி யை பயன் படுத்தி இயற்கையின் படைப்பான ஆண்பாலையும் பெண்பாலையும் அடையாளம் காண அவற்றை முறையே ஆண், பெண் என பெயரிட்டது. அவ்வகை பெயரி டல் வளர்ந்து தாய், தந்தை, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை பாட்டன், பாட்டி, நண்பன், நண்பி, தலைவன், தலைவி என்றெல்லாம் உறவுகளை அடையாளம் காட்டின.

மொழிக்கு பின் தோன்றியதே சட்டம். மொழியின் உதவியின்றி எந்தவொரு சட்ட வல்லுனரோ அல்லது நீதிபதியோ சட்டங்களை உருவாக்கியிருக்கவோ அல்லது அச்சட்டங்களை நடைமுறைப்படுத்தி இருக்கவோ முடியாது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மொழிகள் இன்று எல்லோர்க்கும் இலவசம். ஆனால் அவ்வாறு உருவாக்கியவர்கள் இன்று இல்லை என்றபடியால் நாம் அம்மொழிகளை களவாடி உரிமைகொள்ளவோ அல்லது அம்மொழிகளுக்கு குந்தகம் விளைவிக்கவோ கூடாது. பிரான்சில் நடைமுறையில் உள்ள Civil Law



வும் நன்றி எதுவும் கூறாது பிரெஞ்சு மொழியை கையாடியே உருவாக்கப்பட்டது. அது அப்படியிருக்க பிரெஞ்சு மொழியை கையாடி உருவாக்கப்பட்ட பிரெஞ்சு சட்டம் இப்போது தனது சுயநல அரசியல் கூத்துகளுக்காய் பிரெஞ்சு மொழிக்கு குந்தகம் செய்ய முனைகிறது.


அண்மையில் பிரான்ஸ் தமது சட்டத்தில் *Mother* என்ற சொல்லையும் *Father* என்ற சொல்லையும் சட்ட விரோத சொற்களாக்கி, இவ்விரு சொற்களையும் சட்ட புத்தகங்களில் இருந்து நீக்கி, பதிலாக *Parents* என்ற சொல்லை சட்டப்படி பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துள்ளது. இந்த அரசியல் கூத்தர்களின் அடுத்த சாகசம்கள் என்னவாக இருக்கும்? சிலவேளைகளில் *Girl/boy, man/woman, brother/sister, grandmother/grandfather* என்ற சொற்களையெல்லாம் இவர்கள் சட்ட விரோதமாக்குவார்களா?

அதையும்விட சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால் பிரெஞ்சு மொழியில் பெயர் சொற்களை *masculine* அல்லது *feminine* ஆக அடையாளம் காண்பது. சுயநலத்தின் சிகரங்களான இந்த அரசியல் கூத்தர்களின் புதிய கண்டுபிடிப்பு என்னவெனின் தாய், தந்தையை அடையாளம் காண்பது குற்றம் ஆனால், உதாரணமாக, ஆண் உறுப்பு இல்லாத தொலைபேசி சட்டப்படி ஆணாம் (*la telephone*) பெண் உறுப்பு இல்லாத தொலைக்காட்சி சட்டப்படி பெண்ணாம் (*le television*). இந்த அரசியல் கூத்தர்கள் பிரெஞ்சில் மொழியில் உள்ள ஆனால் உண்மைக்கு புறம்பானதும், நடைமுறையில் எந்தவித பயனும் அற்ற *masculine/feminine* பாவனை முறைமையையும் சட்டவிரோதமாக்குவார்களா? ஒரு காலத்தில் வல்லரசாக இருந்த பிரான்ஸ் (மக்களும் மொழியும் உள்ளடங்கலாக) நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி அழிகிறது. ஆனால் இந்த அரசியல் கூத்தர்கள் கனைனடந வாசிக்கிறார்கள்.


-இளவழகன்-

# நீங்கள் அதிக வட்டி செலுத்துபவரா...!


## இன்றைய அதிகுறைவான வட்டி வீதத்தில் Mortgage பெற்றிட, என்னை நாடுங்கள் - *Senthil Varatharajah*

### Markham / Steeles



**$629,000**
**4+1 Bedroom, 4 Washroom**
Over $80,000 Upgrades. Hardwood Floors. Upgraded Washrooms & Kitchen, Double Door Entry, And Much More. Close To Schools, Ttc And Shoppings

### Steeles / Staines



**$635,000**
**4 Bedroom, 3 Washroom**
Approx $$$70K Extras! Backsplash, Maple Spindles Staircase.Gas Fireplace, Deck, Over 9' High Ceilings In Bsmt.! Fenced Yard Close To All Amenities: Shopping, Schools, Golf, ttc


### Steeles/Middlefield



**$495,000**
**3+1 Bedroom, 4 Washroom**
Double Car Garage. Thoroughly Renovated! new Kitchens Washrooms Main Floor And Second Floor Carpet.Furnace (2006) Roof & Window (2005) Drive Way (2011) Steps To Ttc, Yrt

### Mccowan / Highglen



**$508,000**
**3+2 Bedroom, 4 Washroom**
Sep Entrance To Bsmt Apt. Nicely Decorated. W/O To Interlock Patio. Nice Curb Appeal With Professionally Interlocked Driveway. Great Location, Close To Transit, School, Parks


### Markham/Steeles



**$519,000**
**3+2 Bedroom, 3 Washroom**
Closed To All Amenities!!! Widened Interlocking Driveway, Double Door Entrance, Hardwood Flooring On Main & 2nd Floors, Laminate Flooring On Basement, Vinyl Custom Shutters


### Denison/Middlefield




**$567,000**
**4+2 Bedroom, 4 Washroom**
Fresh Paint,Granite Kitchen Countertop & Backsplash, Extra Cabinets,Huge Deck & Garden Shed In Fenced Backyard,Double Garage, Basement With Separate Walk-Up Entrance.

### Mccowan / Steeles




**$579,000**
**4+2 Bedroom, 4 Washroom**
Double Attached Garage, Ttc Routes & Local Amenities,Schools Etc Open Concept Kitchen, Brick Fireplace & Walkout To Patio.Newly Painted,New Fence & Grass In Backyard,

### Staines / Steeles




**$509,000**
**4 Bedroom, 3 Washroom**
Gleaming Hardwood Floors & Oak Staircase. Direct Access To Garage. Internet Wiring In All Bedrooms & Basement. Premium Large Pie-Shape Lot. Close To Ttc, Schools, Groceries

### Audley / Williamson




**$459,000**
**4 Bedroom, 3 Washroom**
Gourmet Style Kitchen With Breakfast Bar, Stainless Steel Appliances, Loads Of Cupboards And Counter Space Bamboo Flooring. Open Concept Layout.

### Rossland/Salem




**$469,000**
**4 Bedroom, 3 Washroom**
*Castlefield Home*Shannon Model* 7Years Access To Double Garage*Family Size Kitchen With W/O To Yard & Above Ground Pool *Close To 401,Shopping,Schools**

### Harwood/Haskell




**$469,000**
**4 Bedroom, 4 Washroom**
Fully Child Safe Fenced Backyard. Beautiful Dark Bamboo Floors With Living, Dining And Family Room. Very Spacious Kitchen With Breakfast Area. Walk To Schools, Shopping Plaza And Park. Desirable Ajax Community!

### Sheppard/Meadowvale




**$569,000**
**4+1 Bedroom, 4 Washroom**
Separate Entrance To Basement,Features Hardwood In Lr/Dr/Family Rm! Upgraded Kitchen With Ceramic B/Splash+B/I Dishwasher!Basement Completed With Sep Entrance, Kitchen, Bedrm+Full Washrm.This Home Is Equipped With Security Camera!

### Salem / Taunton



**$479,000**
**4 Bedroom, 3 Washroom**
3 Year New Great Gulf Home With Over $10,000 In Upgrades. Kitchen Upgrades Include: Gas Range, Centre Island B/I Dw, Foil Fusion Maple Cabinets.Solid Oak Hardwood Flooring, Brand New Air Conditioner

### Staines/Steeles



**$689,000**
**5 Bedroom, 4 Washroom**
3000 Sq Ft With 5 Principal Bedrooms & 5 Baths*Majestically Positioned On 100X45.97 Ft Corner Lot*Splendid Elevation*Lush Green Lawns* New & Neutral Colour *Grand Double Door Entry, Granite Countertops* Skylight...

### Salem/Taunton



**$500,000**
**4 Bedroom, 3 Washroom**
2438 Sf, 40'Frontage, + 5'Conservation @ Back. Open Concept,Energy Plus! App 90K In Upgrades! Impressive Foyer,Prem Mirage Hardwd Thruout,Porcelain Tiles,Upgr Cabs/Undr Cab Lgtng,Granite C/Tops,Freshly Painted,Proff Landscpd.Walk To Schs,Golf,Amenities

## வீடு வாங்கவும் விற்கவும் அத்துடன் குறைந்த வட்டி வீதத்தில் Mortgage பெற்றிடவும் அழையுங்கள்



# Senthil Varatharajah

*Broker*

**Dir: 416.846.5342**

RE/MAX Vision Realty Inc. BROKERAGE
Each Office Independently Owned and Operated

#1 Most Productive Agents in Canada

**www.senthilhome.com**

1-2210 Markham Road, Scarborough,ON M1B 5V6
Office: 416.321.2228, Sevaratharajah@trebnet.com

Design by 416-854-4309

This advertisement is not intended to solicit properties that are currently listed for sale. Error may occure, check with Senthil for correct info..
* Based on 2010 closed transactions. Source CREA and RE/MAX internal data

# கனடியப் பிரஜா உரிமை மாற்றங்கள் பற்றிய அறிவித்தல்!



செய்தி: கனடாவில் புதிய பிரஜைகள் தங்கள் வாழ்வில் வெற்றி பெற ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் கருத்துப் பரிமாறும் திறமையைக் கொண்டிருத்தல் அவசியம்.

**கனடா பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்க விரும்புகின்றீர்களா?**

விண்ணப்ப படிவம் நிரப்பி அனுப்ப உதவிகள் தேவைப்படுவோர் நாடவேண்டிய தொலைபேசி எண்

**416 269 5883**


*என் எண்ணத்தில் இருந்து...*

# தாயகம் சென்று மீளும் கனடிய அகதிகள்

## தி.மு.கவா? அல்லது அ.தி.மு.கவா?

*நமு பொன்னம்பலம்*

குடிவரவு சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகள் காரியாலயம் சில வேளைகளில் பல்வேறு தரப்பட்ட மக்கள் பிரிவினரால் முழுமை பெறும். இந்த அலுவலகம் ஒன்றிற்கு சென்று வருகையில் எனக்கு பல குட்டிக் கதைகள் காதோடு வந்து பேசும். அவைகளில் பல ஆழமான அர்த்தங்களில் தொனிக்கும்.

இதோ அவ்வாறான ஓர் கதை! ஓர் நாள் நடுத்தர வயது இளைஞர் ஒருவர் குடிவரவுச் சட்டத்தரணியை சந்திப்பதற்காக நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார். இன்னோர் இளைஞர் இந்த அலுவலகத்தில் நுழைந்த வேளையில் வேறு எந்த நாற்காலியும் அந்த அலுவலகத்தில் காலியாக இருக்கவில்லை. புதிதாக அந்த அலுவலகத்துக்கு நுழைந்தவருக்கு அவரை விட வயதில் மூத்த இந்த நடுத்தர வயதுக்காரரர் எழுந்து நின்று தனது ஆசனத்தை விட்டுக் கொடுக்கின்றார். இதனை அவதானித்த சட்ட உதவிக்கு அங்கிருந்த தமிழர் ”உன்னை விட அவனுக்கு வயது குறைவு ஏன் கதிரையை விட்டு எழும்பி இடம் தந்தனீ? என வினாவினாராம். அதற்குரிய பதில் “அவர் எங்கடை முகாமில் பொறுப்பான பதவி வகித்தவர்”

இவ்வாறான நல்ல பல கதைகள் கூறும் அலுவலகம் ஒன்றில் காத்திருந்த வேளையில் இரு இளைஞர்களோடு ஓர் தமிழ் மொழிபெயர்ப்பாளர் அங்கே வந்து சேர்ந்தார். நிறைய நாட்கள் சந்தியாத அந்த நண்பரை குசேலம் விசாரித்து விட்டு இருக்கையில் தன்னோடு அலுவலகம் வந்து சேர்ந்த இரு இளைஞர்களை தனக்கே உரிய நகைச்சுவையோடு அறிமுகம் செய்தார். இவன் தி.மு.க, அவன் அ.தி.மு.க என்றார்.

”அது என்ன புதிதாய் இருக்கிறதே?” என்றேன் நான். அதற்கு அந்த நண்பர் கூட்டி வந்த இளைஞரைப் பார்த்த படி ஒன்றைக் கூறினார், ”இந்தத் தம்பி கனடாவில் அகதியாய் ஏற்றுக் கொள்ளப்பட்டவன். இலங்கை கடவுச் சீட்டு எடுத்துக்கொண்டு நிரந்தர வசிப்பிட அட்டையுடன் இலங்கைக்கு போய்திரும்புகையில் டொரோண்டோ விமான நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். இதுக்குப் பிறகும் கல்யாணத்துக்கு இலங்கைக்கு தான் போகவேணும் எண்டு அடம்பிடிக்கின்றான். இவன் தான் என்ரை தி.மு.ககாரன்” என்றார்.

“அது என்ன தி மு க?” என்றேன் நான். ”இவன் திருந்த முடியாத கழுதை தி மு க” என்றார். அவர். ”ஏன் என்றால் ஒருக்கால் விசாரிக்கப்பட்ட பின்பும், முன்னமும் போகாதே என்று சொன்ன பின்பும் போய் வந்தானே இவன்தான் அசல் தி மு க” என்றார்.

அகதிகள் ஒவ்வொருவரும் இந்த நாட்டில் வதிவிட உரிமை பெறும் பட்சத்தில்” சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல அஞ்சுகின்றேன்” என்ற அடிப்படையில் தான் அவர்களுக்கு வதிவிட உரிமை கிடைக்கின்றது. இதற்கு மாறாக செயல்படும் அகதிக் கோரிக்கையாளர்களின் வதிவிட உரிமையை பறிமுதல் செய்வதற்கு கனடா குடிவரவுத் துறைக்கு வழி உண்டு.

”அது சரி அது என்ன அ.தி.மு.க?” என்றேன் நான். தம்பி இங்கே வா என்று கூப்பிட்டார். தி.மு.க வின் கூட்டாளி என்னருகே வந்தார். ”இவனும் அவனைப் போலவே ஆனால் இலங்கை இன்னமும் செல்லவில்லை. இவனது அம்மா ஊரில் கோவில் நேர்த்தியாம். மகனை எப்படியும் ஊருக்கு கொண்டு வந்து கல்யாணம் பண்ண வேணும் எண்டு. அதன் காரணமாக ஊருக்கு போக திட்டம் போடுகின்றான். இவன் தான் என்ரை அ.தி.மு.க விளங்குதோ” என்றார். “எல்லாம் விளங்குது அ.தி.மு.க” வைத் தவிர என்றேன்.

“இவனது நண்பன் பட்டதுக்கு பிறகும் இவன் போக விரும்பினால் இவன் அதிகம் திருத்த முடியாத கழுதை அ.தி.மு.க” என்றார் நண்பர்.


**உங்கள் முக்கிய ஆவணங்களையும் படங்களையும் மிகவும் மலிவு விலையில் லமினேட் செய்து கொள்ள...**

**Palm Print**

1345 Morningside Ave #8


### மணமகளையும்...

பிரச்சனை என்னவென்றால், ஐயாவுக்கு ஆங்கிலம் சுட்டுப் போட்டாலும் வராது போலிருக்கிறது. பாவம் அவர். கியூறியஸ் போல, தட்டுக் கழுவுதல் போன்ற கலைகளைக் கற்று, மற்ற இனத்தாருடன் தொழில் புரிந்து ஆங்கில அறிவைப் பெருக்கியது போல, ஐயாவுக்கு முடிந்திருக்காது தானே.

ஐயா போனால் கோவில், பேசினால் கடவுளோடு சமஸ்கிருதம், பக்தர்களோடு தமிழ், இதில் ஆங்கிலம் பேச அவருக்கு சந்தர்ப்பம் ஏது?

ஏதோ முடிந்தவரை சொற்களைக் கோர்த்தார். இதை விட சமஸ்கிருதச் சுலோகங்களை கேட்கலாம் என்று தோன்றியது. அது கொஞ்சமாவது புரிந்திருக்கும்.

ஐயா அத்தோடு நின்றிருக்க வேண்டாமா? தன் புலமையைக் காட்டப் போய், மணமகனையும் மணமகளையும் விளிக்க...
Bride and groom என்பதற்குப் பதிலாக..
Bride and broom என்று விட்டார்.

அட, ஒரு தடவை வாய் தடுமாறிச் சொல்லி விட்டார் என்று பார்த்தால்...
ஒன்றல்ல, மூன்று தடவைகள்.
சில நேரம் சில மந்திரங்களை மூன்று தடவை சொல்ல வேண்டும் என்ற விதியோ என்னவோ? ஐயா கியூறியஸை மேசைக்கு கீழ் ஒளிய வைத்தார், மூன்று தடவை.

பாவம், வந்த மாப்பிள்ளை வீட்டார். தமிழ்க் கலாசாரத்தில் கணவனை விளக்குமாறு என்பார்களோ என்று நினைத்திருக்கக் கூடும். நல்ல காலம், கியூறியஸ் பக்கத்திலிருந்திருந்தால் ஆங்கிலத்தில் ‘விளக்குமாறு’ கேட்டிருக்கக் கூடும்.

சிலநேரங்களில் வீடு வந்து சேரும் கணவர்களுக்காக, விளக்குமாறோடு காத்திருக்கும் மனைவியர் பெருமை சொல்லி, மனைவியரை தொழிலுக்கு அனுப்பி விட்டு, வீட்டில் சமைத்து, கூட்டிப் பெருக்கும் கணவர் பெருமையும் சொல்லி, எங்கள் கலாசாரத்தில் குடும்ப வாழ்வில் விளக்குமாறின் பெரும் பங்கு பற்றி கியூறியஸ் ஒரு பாட்டம் அறுத்திருக்க மாட்டானா?
அதுவும் கியூறியஸ் மாப்பிள்ளை பகுதி, ரொம்ப அன்னியோன்னியமாய் விளக்கியிருப்பான்.

இவ்வாறாகத் தானே, கியூறியஸும் வாண்டுவும் மணமகளையும் விளக்குமாறையும் ஆசீர்வதித்து வீடு ஏகினர்.

பாவம், டிஜே தமிழன் அதன் பின்னாலும் சத்தமாய் புலம்பிக் கொண்டே இருந்தான்.


## வகைபடு சிறு விளம்பரங்கள்

நீங்கள் வீடு வாடகைக்கு கொடுக்கிறீர்களா? கணனி விற்பனைக்கு உள்ளதா? வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டா? கார் விற்பனைக்கு உண்டா? வருமான வரி சேவைகள் வழங்குகிறீர்களா?

விற்பனைக்கு உள்ள பொருட்கள், வழங்கும் சேவைகள் எதுவாயினும், பூபாளம் பத்திரிகையிலும் இணையத் தளத்திலும் விளம்பரம் செய்யுங்கள். ஒரே கட்டணத்தில் பத்திரிகையிலும், இணையத்திலும் விளம்பரம் செய்யலாம்.

**416 284 4004**

**www.boobalam.com**
**boobalam@ymail.com**

## Basement For Rent

இரண்டு படுக்கையறைகள், சமையலறையுடன் கூடிய நிலக்கீழ் வீடு வாடகைக்கு உண்டு. புதிதாகப் புனரமைக்கப்பட்ட இந்த வீடு மூன்று ஆரம்ப பாடசாலைகளுக்கு அருகில் உள்ளது. பஸ் தரிப்பிடத்தில் இருந்து இரண்டு நிமிட தூரத்தில் உண்டு. நவம்பர் 1ம் திகதி கிடைக்கும்.

**647-273-7340 (Siva)**

## FOR RENT

Neilson and Sheppard (Near Malvern Mall)
Comfortable Location.
Beautiful 3 Rooms Townhouse for immediate rental.

**Call : 647 969 0175**

## Private Tuition Classes

Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12

Siva
**416 271 8467**
**416 265 9138**

## Photocopies From 4 cents

**Palm Print**

1345 Morningside Ave#8

# மணமகளையும் விளக்குமாறையும் ஆசீர்வதித்தேகி..!

பேராறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

பழி வாங்கிட்டாண்டா டிஜே தமிழன்!

சென்ற வாரம் டிஜே தமிழன் பற்றி கியூறியஸ் எழுதினானா? வார இறுதியில் வசமாக மாட்டிக் கொண்டான், டிஜே தமிழன் ஒருவனிடம்!

கியூறியஸின் சகோதரர் ஒருவரின் மகளுக்கு திருமணம். கியூறியஸ் வீட்டுக் கல்யாணத்தில் பெற்றோருடன் சிறுமிகளாக வந்த சகோதரிகளில் ஒருத்தி.

காலம் எவ்வளவு வேகமாக நகர்கிறது? இதில் குழந்தைகள் எவ்வளவு வேகமாக வளர்கிறார்கள் என்பதில் ஆச்சரியப்படும் நாங்கள் ஒன்றை மறந்து விடுகிறோம். நாங்கள் முதுமையை நோக்கி எவ்வளவு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதை.

நண்பர்களை நீண்ட காலத்தின் பின்னால் காணும்போதெல்லாம், நரை திரை விழுந்து மூப்பொரு வடிவம் கொண்டதாய் ஆச்சரியப்படும் நாங்கள், அவர்களும் எங்களைப் பார்க்கும்போது, அவ்வாறு நினைப்பார்களே என்பதை நினைக்கத் தவறி விடுகிறோம்.

இதனால், மயிர் உதிராமலேயே நரை விழுந்த தன் முன்னோருக்கு, அந்த பரம்பரை அலகுகளைத் தந்ததற்காகவும், மருதாணியைப் படைத்த இறைவனுக்கும் கியூறியஸ் அடிக்கடி நன்றி சொல்வதுண்டு. சுவர் இருந்தால் தானே ஐயா பெயின்ட் அடிக்க முடியும்?

உன்னுடைய இளமையின் இரகசியம் என்ன என்று கியூறியஸின் எரித்திரிய நண்பன் கேட்டபோது, கியூறியஸ் சொன்னான், மூன்றரை டொலர்கள் என்று. அந்த இரகசியத்தை உனக்கும் வாங்கித் தரவா? என்றும் வேறு கேட்டு வைத்தான்.

சகோதரர் கால் நூற்றாண்டாக கியூறியஸ் உடன் வேலை பார்த்தவர். அடிக்கடி கியூறியஸ் தத்துவம் பேசுவான். 'அண்ணை, பிள்ளைகளுக்கு சரியான முடிவுகளை எடுக்கக் கற்றுக் கொடுப்பதும், வழியைக் காட்டி விடுவதும் தான் எங்கள் வேலை. அதற்கப்பால் எல்லாமே அவர்களுடையது'.




இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாததால் தான் பலரும் மன உளைச்சலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். வெறும் கௌரவத்திற்காக, தங்கள் பழமை வாதத்தை பிள்ளைகளில் திணிக்கப் போய், பிள்ளைகளும் நிம்மதியில்லாமல், தாங்களும் நிம்மதியில்லாமல் அலையாமல் இருக்க விரும்புவோர், கியூறியஸின் தத்துவத்தைக் கைக் கொள்வது நல்லது.

அவரும் முற்போக்குவாதி. ஊரில் வீடு வாசலை விட்டு விட்டு வந்து, இனிமேல் அங்கே போவதில்லை என்ற முடிவோடு திரும்பிப் போன போது, தனது வீட்டில் அத்துமீறிக் குடியிருந்த யாரோ விதவைத் தாய்க்கும் பல்கலைக்கழக மாணவிகளான பெண் பிள்ளைகளுக்கும் வீட்டை விட்டு வந்தவர். 'நான் இனிமேல் அங்க போகப் போறேலை. அதுகளை என்ன நடுறோட்டில விடுறதோ?' என்ற கேள்வியுடன்!

திருமணத்திற்கு அழைப்பு விடுத்து விட்டார்கள். இல்லாளும் வீட்டில் இல்லாததால், வீட்டு வாண்டுவையும் சேர்த்துச் செல்வதாய் உத்தேசம். அதற்காய், பத்திரிகை விநியோகித்த குறையில், சிகையலங்காரம் செய்யப் போய், வலு சீரியஸாக 'தம்பி, தலைக்கு அடிக்கிறதுக்கு நல்ல பெயின்ட் என்ன?' என்று நிபுணரிடமும் கேட்டு... 'அண்ணை, கண்ட கண்ட கெமிக்கலுகள் அடிச்சால், கடைசியில கண்ணைப் பழுதாக்கிப் போடும்' என்ற பயமுறுத்தலையும் மீறி வாங்கி வந்தால்... பெயின்ட் அடிக்க, குறைந்த பட்சம் மயிர் ஒரு நீளம் இருக்க வேண்டும். பெயின்ட் அடித்து, ஷவரில் சங்கீதம் பாடி முடிந்து, தலையைத் துவட்ட, நரை திரை மூப்பொரு வடிவம் ஆங்காங்கே தலை காட்டத் தொடங்கியது.

முதுமை என்று கவலை கொள்ளவா, இல்லை, முதிர்ச்சி என்று பெருமை கொள்ளவா என்ற இடர்பாட்டுக்குள், இல்லாள் இருந்தால் அங்கீகரிக்கவே மாட்டாத உடையுடன், 'உனக்கு ஆக்கள் வாற இடத்தில உடுத்திக் கொண்டு வரத் தெரியாது', 'அங்க வாறவங்களுக்கு என்னைத் தெரியாது. பிறகென்னத்துக்கு?' கியூறியஸ் ஆஜரானான்.
தெரியாத வீட்டுக்கு கல்யாணம்.
தெரிந்த வீட்டுக் கல்யாணம் ஆயின்... 'அங்க வாறவங்களுக்கு என்னைத் தெரியும். பிறகென்னத்துக்கு?'.

ஆள் பாதி, ஆடை பாதி!
ஆளே முழுமை, ஆடை ஏதுக்கடி குதம்பாய்!

'இல்லாள்' 'ஆள் இல்'லாததால், பெரிய உலக மகாயுத்தம் ஒன்று தவிர்க்கப்பட்டது.
அப்படி ஒன்றுமில்லை. உலகம் பூராய் இருக்கும் கியூறியஸின் சகோதரிகளுக்கு 'உங்கட தம்பி, ஒண்டுக்கும் வடிவா வெளிக்கிட்டு வாறேலை'
'வாறன் உவனுக்கு குடுக்கிறன் கிழிப்பு' என்று சத்தியம் செய்கின்ற அவர்களும், கியூறியஸின் குரலைக் கேட்டவுடன், 'ராசா, நீ ஏனடா வடிவா வெளிக்கிட்டுப் போறேலையாம்?' என்று ஆயுத ஒப்படைப்புச் செய்வார்கள்.

கலியாண வீட்டில் கூட்டத்தின் நடுவில் தனிமையில் கியூறியஸ். மேசை மேசையாய் இருந்த உறவினர்கள். தனியொரு மேசையில் தனியனாய்... நீண்ட நேரத்தின் பின் வந்தான் வாண்டு.

பெண் தமிழ். பையன் வெள்ளையினத்தவன்.
கியூறியஸின் தத்துவம் வேலை செய்கிறது. முடிவு எடுக்க கற்றுக் கொடுத்தாயிற்று. வழியில் நடப்பது அவர்களுடைய பொறுப்பு.
தந்தை கியூறியஸ்க்கு சொன்னார்... நீ சொன்ன மாதிரி முடிவு எடுக்கக் கற்றுக் கொடுத்தாயிற்று. பின்னே என்ன, நான் என்ன காரால் போய் மோதுவதா?
கியூறியஸின் தத்துவத்தை பின்பற்றினால், மனநிம்மதி மட்டும் இல்லை, சிறை வாசத்திலிருந்தும் தப்பிக்கலாம்.

அருமையான பையன். பணிவும் பண்பும் நிறைந்தவன். திருமணத்திற்கு முன்னால், முதன் முதலில் சந்தித்த போது, வாழ்த்தி, 'என்னை ஒரு தடவை கட்டியணை' என்ற போது, குனிந்து அணைத்த உயர்ந்தவன்.
அவனது பெற்றோரும் சகோதரர்களும் ஒரு புறம், பெண் வீட்டார் ஒரு புறம். ஒரே சிறகிலான பறவைகள் ஒன்றாக...
மணப்பெண்ணின் பள்ளித் தோழிகள்... சோமாலிய, சீன, வெள்ளையினத்தவர்கள் சேலையுடன் தமிழ்ப் பண்பாட்டில்!

சைவத் திருமணத்தின் பெருமையையும், மாப்பிள்ளை வீட்டார் நன்மை கருதி, பரிமாறப்படும் உணவின் உறைப்பையும் விளக்கி, மணப்பெண் தயாரித்த சிறு பிரசுரம் ஒவ்வொரு கதிரையிலும் இருந்தது. அம்மி மிதித்தல் தொடங்கி, அருந்ததி பார்த்தல் என சகலதற்கும் விளக்கங்கள் இருந்தன. தமிழிலும் போட்டிருந்தால், அங்கேயிருந்த தமிழர் பலருக்கு உதவியிருக்கக் கூடும்.

திருமண வீட்டில் மாம்பழ ஜூஸும் வடை, முறுக்குமாய் வயிறு பொரும, பின்னாடி நம்ம டிஜே தமிழன் நின்றான்... இப்போது அவனெல்லாம் பக்கேஜ் டீலுக்குள். சின்ன அறைக்குள் பெரிய சவர்க்காரப் பெட்டி பயமுறுத்த... வாத்திய இசை. இதென்ன புது ஸ்டைல்? பாடல்கள் எல்லாமே யாரோ வாத்தியங்களில் இசை. இது இந்த டிஜே தமிழனின் தனித்துவமான ஸ்டைலோ என்னவோ?

பகல் நேரம் என்பதாலோ என்னவோ, பெரிதாய் சத்தமில்லை என்று பார்த்தால், மாப்பிள்ளை வந்திறங்கியதும், மங்கள வாத்தியக்காரர்கள் ஊதத் தொடங்கியதும், முன்னால் இருந்த கியூறியஸை இலக்கு வைத்தோ என்னவோ பழி வாங்கத் தொடங்கினான்.

வேறென்ன பண்ண? தூக்கம் கலைத்த பக்திப் பாடல்கள் மாதிரி, நாதஸ்வர ஓசையை காலையும் தலையையும் ஆட்டி ரசிக்க வேண்டியதாயிற்று.

கியூறியஸும் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். யாராவது வந்து, 'தம்பி, நீர் எவடம்?' என்று கேட்க மாட்டார்களா? என்று.

கேட்டிருந்தால், 'நான் மாப்பிளை பகுதி' என்று சொல்லும் உத்தேசத்துடன். யாருமே அந்த விசப்பரீட்சையில் இறங்கவில்லை.

ஐயர் மந்திரம் சொல்லி, தாலி கட்டெல்லாம் நடந்ததும், உடனே போட்டாண்டா டிஜே தமிழன் ஒரு பாட்டு.

முன்பெல்லாம் தமிழனுக்கு பண்பாடு இருந்தது. பெண் வரும்போது போடுவான் பாட்டு... வாராய் என் தோழி வாராயோ, மணப் பந்தல் காண வாராயோ.

அடுத்து வரும் இன்னொன்று... மணமகளே மணமகளே வா வா, உன் வலது காலை எடுத்து வைத்து வா.

கனடா வந்த டிஜே தமிழன் போட்டான் பாட்டு... இது தானா, இது தானா, நான் எதிர்பார்த்த நன்நாளும் இது தானா?

ஒன்றாய் வாழ்ந்த மணமக்களுக்கு திருமணம் நடக்கிறது. ஏதோ இது தான் முதல் ராத்திரி, அன்புக் காதலி என்னை ஆதரி என்று வாத்யார் பாடிய மாதிரி...

பாவம்... பையன் பிறந்த நாளில் எழுச்சி கீதங்களோடு போராடியிருப்பான். அவனுக்கு தமிழ்ச் சினிமாவின் கோல்டன் ஹிட்ஸ் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏதோ அவனால் ஆனது!

இதற்குள் சகோதரரின் நண்பரும் முன்னாள் தாயகம் வாசகருமான ஒருவர் வந்து சேர்ந்தார். அவரும் டிஜே தமிழனின் தொல்லை தாங்காமல், குடும்பத்தாரை விட்டு, கியூறியஸின் மேசையில் வந்து அமர்ந்தார். நேரில் காணா விட்டாலும், கேள்விப்பட்டதால், எட்டி 'நீங்கள் இன்னார் தானே' என்று கேட்டு வைக்க, அவரும் ஆச்சரியத்தில் மூழ்கி, அறிமுகம்.

அப்புறமாய் அரசியலும் பேசி... சமீபத்தில் யாழ் போய் வந்திருக்கிறார். யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வருகின்ற சிங்களவர்களால், யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்திற்கு எந்த நன்மையும் இல்லையாம். இது இவர் அங்குள்ள ஓட்டோகாரரிடம் கேட்டறிந்தது. காரணம், வருகின்ற சிங்களவர்கள் எங்காவது மரத்தின் கீழ் முகாம் அடித்துச் சமைத்து, அப்படியே விகாரைகளையும் பார்த்துக் கொண்டு போய் விடுகிறார்களாம். எங்கேயும் பணம் செலவிடுதில்லையாம்.

தமிழன் ஒட்டுமொத்தமாய் இளிச்சவாயனாய் தான் இருப்பான் போலிருக்கிறது. எல்லாருமே வந்து மொட்டையடித்து விட்டுப் போய் விடுகிறார்கள்.
ஆனால் இந்த உண்மையைச் சொன்னால் மட்டும் தமிழனுக்கு கோபம் வந்து விடுகிறது.
அது எனக்கும் தெரியும். அதை நீ வெளியில எல்லாருக்கும் கேட்கிற மாதிரி சொல்ல வேணுமோ? என்ற மாதிரி.

வந்த சகோதரரின் நண்பருக்கும், பூபாளத்தையும் கொடுத்து வழியனுப்பியாயிற்று. இனியென்ன, பூபாளம் எடுக்க வெள்ளி தோறும் தவம் கிடப்பார்.

இதெல்லாம் ஒரு புறம் இருக்க...

கியூறியஸை மேசைக்கு கீழ் ஒளிய வைத்த விடயம் ஒன்றுண்டு.

வெள்ளையினப் பையனின் உற்றார் இருந்ததைக் கண்டதும் ஏனோ மந்திரம் சொன்ன ஐயாவுக்கு ஆங்கிலம் பேச வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. அவர் சொன்ன சமஸ்கிருத மந்திரத்தின் அர்த்தம் பற்றி கியூறியஸே அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவருக்கோ அதை ஆங்கிலத்தில் விளங்கப்படுத்த வேண்டும் என்ற துடிப்பு.

14ம் பக்கம்...

# அமெரிக்க வெளியுறவில் காணப்படாத பல விடயங்கள்

22ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களான ஒபமாவுக்கும் ராம்னிக்கும் இடையிலான விவாதம் Bob Schieffer நடுநிலைமையில் நடைபெற்றது. இந்த விவாதம் முற்றாக அமெரிக்க வெளியுறவு கொள்கை பற்றியது என்றாலும் "இவ்வளவு தானா அமெரிக்க வெளியுறவு கொள்கை?" என வியக்கும் வகையில் அமைந்திருந்து இந்த விவாதம். இக்காலங்களில் அரசியல் வாதிகளுக்கும் பத்திரிகையாளர்க்கும் என்ன வித்தியாசம் என கேட்கவும் வைத்தது இந்த விவாதம். பொதுவாகவே அரசியல் வாதிகள் வாக்காளர் நாடியறிந்து தான் கருத்துக்களை அள்ளி வீசுவர், திட்டங்களை முன்வைப்பர். ஆனால் பத்திரிகையாளரும் அந்த சிறு வட்டத்துள் நிற்கலாமா?

இடைவெளி எதுவும் இன்றி ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்ற இந்த விவாதத்தில் முற்றாக கைவிடப்பட்ட விடயம் ஐரோப்பாவும் அங்கு நிலவும் பொருளாதார நெருக்கடிகளும். NATO, the West போன்ற குடைகளுள் ஐரோப்பாவை தம்முடன் இணைந்து இயங்கவேண்டும் என எதிர்பார்க்கும் அமெரிக்க அரசியல் ஐரோப்பாவை தனது வெளியுறவு கொள்கையில் இருந்து முற்றாக நீக்கியது வியக்கப்பட வேண்டியதே. இரண்டு அமெரிக்க அரசியல்வாதிகள் மட்டுமல்ல அனுபவம் மிக்க நடுநிலையாளரும் இவ்விடயத்தை தவிர்த்திருந்தார். ஏன், அவர்கள்தான் பதில் கூறவேண்டும்.

இங்கு மிக குறிப்பாக கவனிக்க வேண்டிய விடயம் என்வென்றால் சீன அரசியல் ஐரோப்பிய அரசியலுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கூட அமெரிக்க அரசியலும் பத்திரிக்கை துறையும் கொடுக்கவில்லை. இவர்களின் இந்த மனோநிலை அமெரிக்க-சீன பொருளாதார போட்டிகளில் ஐரோப்பா நடுநிலைமை வகிக்கும் நிலைபாட்டிற்கு தள்ளக்கூடும். அதேவேளை சீனாவும் கைநிரம்ப பணத்துடன் ஐரோப்பாவுடன் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த ஆவலாயுள்ளது.

அடுத்த விடயம் அமெரிக்க-இஸ்லாமிய உறவு. அமெரிக்க தரப்பு தமது அவாவை திடமாக முன்வைத்தது. ஒபாமையும் ராம்னியும் அமெரிக்காவின் விருப்புகளை இஸ்லாமிய உலகு உணரவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். மத்தியகிழக்கு விடங்களில் அது அவர்க்கு முதலாவது முக்கிய விடயம். ஆனால் இஸ்லாமியர்க்கு முக்கிய விடயம் என்ன? பெரும்பாலான இஸ்லாமியர்கள் அமெரிக்காவிடம் எதிர்பார்ப்பது பாலஸ்தீனியர் தீர்வு. அதைப்பற்றி இந்த இரு அரசியல்வாதிகள் என்ன சொன்னார்கள்? இந்த விவாத நடுநிலையாளராவது ஏதாவது சொன்னாரா? இல்லை. அதனால் அடுத்த நான்கு வருடத்துக்கு அமெரிக்க-இஸ்லாமிய உறவில் பாரிய நெருக்கம் எதையும் எதிர்பாக்க முடியாது. குறிப்பாக அமெரிக்க தரப்பில் இருந்து நல்லது எதவும் தோன்றக்கூடும் என எதிர்பார்ப்பது கடினம்.

மூன்றாவது, இவர்கள் சில மத்திய கிழக்கு குழப்பங்களை மறைப்பது. சிரியா, லிபியா, போன்ற நாடுகளையெல்லாம் குறிப்பிட்ட விவாதம் பஹ்ரெயின் போன்ற ஆதரவு நாட்டு குழப்பங்களை மூடி மறைத்துள்ளது. நடுநிலையாளரும் இவ்விடையங்களை தவிர்த்திருந்தார். இவர்கள் தமது கண்களை மூடினால் இந்த விடங்கள் இல்லாமல் அழியப்போவது இல்லை. ஈரானுக்கு தன்னை பாதுகாக்க திருப்பி தாக்கும் உரிமை இல்லையா?

நாலாவதாக கவனிக்க வேண்டியது ஈரான்-இஸ்ரவேல் விடயம். இரான் இஸ்ரவேலை முதலில் தாக்கினால் அமெரிக்கா என்ன செய்யும் என்பதை ஆணித்தரமாக கூறிய இவர்கள் இஸ்ரவேல் ஈரானை முதலில் தாக்கினால்தாம் என்ன செய்வார் என்ற கேள்வியைகூட முன்வைக்கவில்லை. நடுநிலையாளரும் அதை ஏனோ கேட்கவில்லை.

அமெரிக்க பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு கொண்ட கனடா கூட இவர்களின் வெளியுறவு கொள்கையில் இடம்பெறவில்லை. அதேவேளை கனடா தனது எரிபொருள் மற்றும் பெற்றோலிய முதலீடுகளுக்கு சீன, மலேசியா போன்ற நாடுகளை அழைப்பதுவும் பிடிக்காத விடயம். கனடிய எரிபொருள்களை தமது சொந்த எரிபொருள்களாக இவர்கள் எவ்வளவு காலத்துக்கு தான் கருதமுடியும்?

கூட்டிக்கழித்து பார்த்தால் அமெரிக்காவின் அடுத்த நான்கு வருட வெளியுறவு கொள்கை பெரிதாக எதையும் சாதிக்கப்போவது இல்லை என்பது தெரிகிறது. மாறாக நடப்பினும் அவை அமெரிக்க வாக்காளர் தூங்கும் நேரம் தான் நடக்கும்.

**இளவழகன்**

# கமலின் கடைசிக் கடிதம்,

காதல் மன்னன் என்று அழைக்கப்படும் ஹிந்தி திரைப்பட இயக்குனர் ஜாஸ் சோப்ரா அவர்கள் தனது 80ஆவது வயதில் காலமானார். 1959ஆம் ஆண்டு இவர் இயக்கிய முதல் திரைப்படம் "தூல் ஹா போல்" வெளியானது. அமிதாப்பச்சன், சாருஹாஷன் போன்றோர் பிரபல்யமாவதற்கு ஜாஸ் சோப்ரா முக்கியகாரணமாக இருந்திருக்கின்றார். இவரது இழப்பு தனக்கு மிகவும் அதிர்சியாக உள்ளதாகக் குறிப்பிடும் நடிகர் கமலஹாசன் அவர் குடும்பத்தினருக்கு ஒரு அனுதாபக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

சோப்ரா ஜீ அவர்களே இந்தக் கடிதத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள், நீங்கள் உயிருடன் இருக்கும் போதே நான் உங்களுக்கு எனது கருத்தைத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். உங்களை நான் மிகவும் மதிக்கின்றேன், உங்களிடம் இருந்துதான் நான் தன்னம்பிக்கையைக் கற்றுக் கொண்டேன். ஆனால் உங்களுக்கு இதனைத் தெரியப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எனக்கு ஒரு போதும் அமையவில்லை. நான் அகந்தை கொண்டவனோ, தற்பெருமைக்காரனோ அல்ல, சிலவேளைகளில் மிகஉயர்ந்த ஆளுமைகளின் முன்னால் நாம் இயல்பை இழந்துவிடுகின்றோம். இக்கடிதம் தற்போது ஒருபக்கக் கடிதமாகிப் போய்விட்டது. இருந்தும் உங்களோடு பல மணிநேரங்களைச் செலவிடும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்திருக்கின்றது. அதனை நான் பெரிதும் மதிக்கின்றேன். உங்களை நினைவுகொள்ளவும் மதிக்கவும் இளம்சந்ததியினர் காத்திருக்கின்றார்கள். உங்கள் குடும்பத்தினர் உங்கள் பெயரையும் புகழையும் கொண்டு செல்வார்கள். அவர்களுக்கு எனது அனுதாபங்கள்.

# சிவக்குமார் மீண்டும் தாத்தா

நடிகர் கார்த்திக் அப்பாவாகப் போகின்றார். அவரது மனைவி ரஞ்சினி கர்ப்பமாக உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றார். சூரியா, ஜோதிகா காதலுக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த நடிகர் சிவக்குமார், இறுதியில் சூரியாவின் பிடிவாதத்திற்கு முன்னால் விட்டுக்கொடுக்கும்படி ஆகிவிட்டது.

இரண்டாவது மகன் கார்த்திக் நடிகை தமனாவோடு நெருங்கிப் பழகுகின்றார் என்று அறிந்ததும் உடனடியாக அவருக்குத் திருமணத்தைச் செய்து முடித்ததோடு மட்டுமல்ல தமனாவிற்கு தமிழ்பட உலகில் அதிகம் திரைப்படங்கள் கிடைக்காமலும் பார்த்துக்கொண்டார். முக்கியமாக கார்த்திக்குடன் நடிக்கும்படி கேட்டு வரவேண்டாம் என்று திரைப்பட இயக்குனர்களைக் கேட்டுக்கொண்டதாகச் செய்தி கசிந்தது. இரண்டு மருமகள்களுமே நடிகைகளாகிப் போய்விடுவார்களோ என்ற அச்சம் சிவக்குமாருக்கு. தன் மகன்களை நடிக்க அனுமதித்த சிவக்குமார் மகளை நடிக்க அனுமதிக்காததற்கு காரணம் பெண்கள் நடித்தால் அது கௌரவக்குறைவாக இருக்கும் என்று அவர் கருதுவதால்தானா?

# தவறு பாடகி சின்மயி மேலா?

இணையத்தளத்தில் தன்னையும் தன் தாயாரையும் தவறான முறையில் ஆபாசமாகவும், அநாகரீகமாகவும் தாக்கியுள்ளார்கள் என்று பாடகி சின்மயி கொடுத்த புகாரின் அடிப்படையில் சென்னையில் சில இணையத்தள எழுத்தாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இணையத் தளங்களில் உரையாடும் போது பொதுமக்களை விடவும் பிரபல்யங்கள் மிகவும் அக்கறையுடனும் பொறுப்புணர்வோடும் செயல் படவேண்டும் என்ற அவசியத்தை சின்மயி உணரத் தவறிவிட்டார். இந்திய மீனவர்களை இலங்கை இராணுவம் சுட்டுக் கொல்கின்றார்கள் என்ற போதும், ஒரு உயர்சாதிப் பெண்ணிற்கு இடஒதுக்கீடு காரணமாக இடம் கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுந்த போதும், சமூக அக்கறையின்றி அவர் எழுதிய பதில்கள் அவரை சமூக அக்கறையற்ற பிற்போக்குவாதியாக அடையாளம் காட்டியுள்ளன. இருந்தும் ஒரு பெண்ணை பெண் என்ற காரணத்துக்காகவே மிகவும் கேவலமான முறையில் ஆபாசமாகக் தாக்குதை நியாயப்படுத்த முடியாது. சைபர் புள்ளீயிங் என்ற அடிப்படையில் இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

## இந்த வாரம் boobalam.com இல்...

இடம் பெயர்ந்த மக்களுக்கு 8 ஆயிரம் வீடுகள்

இருபது வருடங்களின் பின் குடியேறும் மாதகல் மக்கள்

13ம் திருத்தத்தை நீக்க அரசு தயங்காது... பசில் ராஜபக்ச

பருவ மழையில் மீள் குடியேறிய மக்கள் அவலம்

## சூப்...

ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஆண்டு சென்னையில் ஐந்திணை சுற்றுச் சூழல் விழாவில் பராம்பரிய உணவுத் திருவிழா ஒன்றும் நடைபெற்றுள்ளது. பூவுலகின் நண்பர்கள் அமைப்பு நடாத்திய இந் நிகழ்வில் பானகம், நவதானிய கொழுக்கட்டை, தேனும் தினைமாவும், வரகரிசிச் சோறு, வல்லாரைத் தோசை, கூட்டாஞ்சோறு போன்றவற்றுடன் பழங்களும் விற்கப்பட்டுள்ளன. சுற்றுச் சூழல் மாசுபடுவதை தடுக்கும் இவ் அமைப்பினரின் முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சென்னையின் சில பகுதிகளில் கூழ் விற்கும் கடைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு கூடுதலாக ஆட்டோ சாரதிகள் போன்றவர்களே அதிகம் கூழை வாங்குவதாக ஒரு வியாபாரி தினமணி பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார்.

யூரியூபில் பலவகை கூழ் செய்முறைகள் உள்ளன. ஜப்பானிய இசை பிண்ணனியில் முழங்க "கண்டாவளைக் கூழ்" யூரியூபில் செய்து காண்பித்தார்கள். ரொரண்ரோவில் நடைபெற்ற சூப் திருவிழாவும் நல்ல உணவை மக்கள் நாடவேண்டும் என்ற நோக்குடனும் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் செயல்படும் அமைப்பினரே நடாத்தியுள்ளனர்.. ஒரு தடவை தேடகத்தின் நாடக விழாவில் கொண்டல் கடலை சம்பல் போன்ற சத்துணவு விற்கப்பட்டது. தமிழ் முற்போக்கு அமைப்புக்கள் தங்களது விழாக்களில் நல்ல உணவை அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதில்லை. அடுத்த கோடையிலாவது ஒரு கூழ் திருவிழா ஏதாவது அமைப்பு நடாத்துமா என்ற ஆதங்கம். அதற்கு முன் இந்த கிறிஸ்மஸ் பார்ட்டிகளி(பாட்டி)ல் தண்ணியுடன் குறைஞ்சது கூழ் தந்தால் மணியாத்தான் இருக்கும்.